88 August
விஞ்ஞானப் பிரிவு
வகுப்புக்கள்
பிரிவு II
விரைவில் ஆரம்பம்
விண்ணப்பங்கள்
ஏற்கப்படுகின்றன
விபரங்களுக்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

விலை ரூ 2/=

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

Physics: திரு. வர்ணம்
Chemistry: திரு. தில்லை நாதன்
Botany: திரு. குகாதரன்
Zoology: திரு. நாக நாதன்
Pure & Applied Maths: திரு. நல்லையா
விபரங்களுக்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

மலர்:-1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு மாசி மீ 17 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 19 (01-03-1986) -SANJEAVY- REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:6

★ இலங்கைத் தமிழர் படுகொலை

# தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு

சென்னை, பெப். 28

இலங்கையில் தமிழர் படுகொலை செய்யப்படுவதை ஆட்சேபித்து, தமிழ் நாட்டில் அடுத்த வார இறுதியில் இருந்து பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம், காமராஜ் காங்கிரஸ், திராவிடர் கழகம் ஆகியன கூட்டாக இந்த எதிர்ப்பு இயக்கத்தை நடத்த உள்ளன.

கடை அடைப்பு, உண்ணாவிரதம் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

இப்படி இங்குள்ள தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பிக்குமார் கொழும்பில் சத்தியாக்கிரகம்

கொழும்பு, மார்ச் 1

சுமார் 60 பௌத்த பிக்குகள் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் கொழும்பு விகாரமகாதேவி பூங்கா நுழைவாயிலில் சத்தியாக்கிரகம் செய்தனர்.

பதினைந்து நிமிடங்களில் கலகம் அடக்கும் பொலீஸார் அந்த இடத்துக்கு விரைந்து வந்து பிக்குகளைக் கலைத்து விட்டனர்.

இந்தப் பிக்குகளுக்கு வண. மடிகே பஞ்ஞசிக தேரர் தலைமை வகித்தார்.

தமிழ் ஈழம் அமைக்கும் போராட்டம், மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்கப்பட்டமை ஆகியனவற்றை எதிர்த்தே இச்சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து வார்ட் பிளேஸ், ரொஸ்மீட் பிளேஸ் உட்பட முக்கிய பகுதிகளில் கலகம் அடக்கும் படைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

## படுக்கையில் வைத்து மூவர் சுட்டுக் கொலை

### சந்திவெளியில் பயங்கரம்

மட்டக்களப்பு, மார்ச் 1

சந்திவெளியில் மூன்று வீடுகளினுள் இனந் தெரியாத நபர்கள் புகுந்து மூன்று பேரைப் படுக்கையில் வைத்துச் சுட்டுக் கொலை செய்தனர்.

வியாழக்கிழமை இரவு பத்தரை மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் சந்திவெளிக் கிராமம் உள்ளது.

இறந்தவர்களில் ஒருவர் பெண்.

பெயர் விவரம் வருமாறு:

பூமணி (பெண்), வயது 45. ராசமணி (ஆண்), வயது 55. சின்னத்தம்பி (ஆண்) வயது 50.

ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவராக இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## புதிய யோசனைகளை இலங்கை கையளித்தது

### அதில் முன்னேற்றம் இருக்கலாம் என்று பிரதமர் ராஜீவ் நம்பிக்கை

புதுடில்லி, பெப் 28

இனப் பிரச்சினை தொடர்பான தனது புதிய யோசனைகளை இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் கையளித்து விட்டது.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி லோக சபையில் இதனைத் தெரிவித்தார்.

புதிய யோசனைகள் முன்னேற்றமான அம்சங்களைக் கொண்டிருக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

துரதிர்ஷ்டவசமாக சமாதானத்தையோ அல்லது போர் நிறுத்தத்தையோ இலங்கையில் ஏற்படுத்த முடியவில்லை.

இலங்கையில் வன்முறைகள் அதிகரிப்பது கவலை தருகிறது என்றும் பிரதமர் கூறினார்.

★ தமிழரைக் காப்பாற்ற

# இந்திய ராணுவத்தை இலங்கைக்கு அனுப்புக

## தமிழகத் தலைவர்கள் ராஜீவுக்குத் தந்தி

சென்னை, பெப். 28

இலங்கைத் தமிழர்களைக் கொலைக்களத்தில் இருந்து காப்பாற்ற இந்தியா ராணுவத்தை அனுப்ப வேண்டும்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு தமிழகத் தலைவர்கள் பலர் கூட்டாக அனுப்பி வைத்த அவசரத் தந்தியில் மேற்கண்டவாறு கோரியுள்ளனர்.

இலங்கையில் தமிழர் வகை தொகை இன்றி படுகொலை செய்யப்படுகின்றனர். விமானத் தாக்குதல்களும் தமிழர் வாழும் பகுதிகளில் நடத்தப்படுகின்றன.

அப்பாவித் தமிழர், குழந்தைகள், பெண்கள் ஈவிரக்கமின்றிக்கொல்லப் படுவது சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது.

கொலைக் களத்தில் இருந்து இலங்கைத் தமிழர் காப்பாற்றப்பட வேண்டும்.

இந்திய ராணுவத்தை உடனே அனுப்பி இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற வேண்டும். - இப்படி அவசரத் தந்தியில் கூறப்பட்டு உள்ளது.

தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி, காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பி. நெடுமாறன், காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. குமரி அனந்தன், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானகிராமணியார் ஆகியோரே இத்தந்தியை அனுப்பி வைத்தனர்.

## இவற்றுக்கும் எங்கள் கதி!



பாலைப் பொழிந்து தரும், பாப்பா! — அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா;
வாலைக் குழைத்து வரும் நாய்தான் — அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா!
- மகாகவி பாரதியார் -

வீட்டின் மாதா எனப் போற்றப்படும் கோமாதா தமிழர்களுக்குப் பால் பொழிந்து கொடுத்ததால் அதுவும் பயங்கரவாதி பட்டியலில் சேர்க்கப்பட்டுவிட்டது!

அதேபோல தமிழனின் தோழனாய் இருந்த அந்த நன்றியுள்ள ஜீவனான நாயும் அப்பாவித் தமிழனைப்போல் பயங்கரவாதி ஆகிவிட்டது!!

என்னே காலக் கொடுமை. கலியுகத்தின் தாக்கமோ?

தாவடியில் நடந்த இரண்டாவது விமானத் தாக்குதலில் மரணம் அடைந்த கால்நடைகளுள் ஒரு பசுவையும், ஒரு நாயையும் மேலே உள்ள படத்தில் காண்கிறீர்கள்.

## தமிழர் பிரச்சினை: முழு அளவில் தொடர் விவாதம்

கொழும்பு, மார்ச் 1

தமிழர் பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் முழு அளவிலான விவாதம் ஒன்று நடத்தப்படும் என அறியப்படுகிறது.

இந்திய நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் திரு. பகத் தெரிவித்த கருத்துக்கள் குறித்தும்—

தமிழகத்தில் போராளிகளுக்கு ஆதரவு வழங்கப்படுவது குறித்தும்—

இந்த விவாதத்தில் முக்கியமாக ஆராயப்படும் எனத் தெரிகிறது.

## உருத்திரபுரத்தில் நேற்றுத் தேடுதல்

கிளிநொச்சி, மார்ச் 1

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங்களிலும் நடைபவனியாகவும் சென்ற ராணுவம் நேற்று அதிகாலை முதல் உருத்திரபுரம், சிவநகர்ப் பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியது.

இப்பகுதிகளில் பலத்த குண்டுச் சத்தங்களும், துவக்குச் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன. இப்பகுதிக்கான போக்குவரத்துக்களும் துண்டிக்கப்பட்டிருந்தன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உருத்திரபுரம் பகுதிக்கு ராணுவம் சென்றபோது ஆறும் வாய்க்கால் பகுதியில் பாலம் ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. அதன் பின்னர் இப்பகுதியில் ராணுவ ரோந்து தடைப்பட்டிருந்தது.

தற்போது இப்பாதை சீரடையாததால் கனகபுரம் வீதியூடாகவும், பூநகரிப்பக்கமுள்ள வீதிவழியாகவும் அதிகாலை ராணுவம் உருத்திரபுரம் பகுதிக்குச் சென்றதாகக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## லொறி, வான் எரிப்பு

கொழும்பு, மார்ச் 1

உடப்பு சலாவையில் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களின் லொறி ஒன்றும் வான் ஒன்றும் இனந்தெரியாதவர்களினால் கடந்த வியாழன் இரவு எரிக்கப்பட்டன.

இதனையடுத்து அப்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டன.

## அரச அதிபருக்கும் இந்தக் கதி!

மட்டக்களப்பு, மார்ச் 1

மட்டக்களப்பு அரச அதிபரின் உத்தியோகக் கார் பொலீஸ் நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறது.

இக்காரைக் கடத்தச் சில தினங்களுக்கு முன்னர் இனந் தெரியாதவர்கள் முயற்சித்தனர்.

"ஸ்டார்ட்" வராததால் அக்கடத்தல் முயற்சி கைகூடவில்லை.

அதைத் தொடர்ந்தே அரச அதிபரின் கார் பொலீஸ் பாதுகாப்புக்கு மாற்றப்பட்டது.

இப்போது அரச அதிபர் நடந்தே கச்சேரிக்குச் சென்று வருகிறார்.

### சுபநேரம்

01 - 03 - 1986

சனிக்கிழமை

சுபநேரம்:
3.28 முதல் 4-58 வரை
ராகுகாலம்;
9-28 முதல் 10-58 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## தமிழ் மொழி மாநிலம்: இம்மியும் விட்டுக் கொடோம்

### கூட்டணி வட்டாரங்கள் தகவல்

சென்னை, பெப். 28

தமிழர் தாயகம் பிரிக்கப்படாத முறையில் தமிழ் மொழி மாநிலம் அமைக்கும் திட்டத்தில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி இம்மியும் விட்டுக் கொடுக்காது.

சென்னையில் உள்ள கூட்டணி வட்டாரங்கள் உதயனுக்கு இத்தகவலைத் தெரிவித்தன.

இலங்கை அரசு புதிய யோசனைகளைத் தெரிவித்து இருப்பதாக இந்திய நாடாளுமன்றத்தில் பிரதமர் காந்தி கடந்த வியாழன் அறிவித்து இருந்தார் அல்லவா!

அது சம்பந்தமாக சென்னையில் உள்ள கூட்டணி வட்டாரங்களுடன் தொடர்பு கொண்ட போது தான் மேற்கண்ட உறுதி வழங்கப்பட்டது.

தமிழர் தாயகம் பிரிக்கப்படாமல் வழங்கப்பட வேண்டும் என்பதில் கூட்டணி உறுதியாக நிற்கும்.

கூட்டணியின் மாற்று யோசனைகளில் இது தெளிவாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசு எந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் ஆஸ்பத்திரிக்கு விடிவு காலம்

### புதிய கருவிகள் வருகின்றன

நல்லூர், மார்ச் 1

போதனா வைத்தியசாலைகள் அமைச்சு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நேற்றுப் புதிய இரண்டு எக்ஸ்—கதிர் படம் பிடிக்கும் இயந்திரங்களை அனுப்பி வைத்துள்ளது.

சுமார் பத்து லட்சம் பெறுமதியான இந்த இரண்டு இயந்திரங்களும் ஜப்பானில் தயாரிக்கப்பட்டவையாகும்.

மனிதனின் உறுப்புகள் அங்கிருக்கும் கிருமிகள் ஆகியவற்றின் செயற்பாடுகளைச் சோதனை மூலம் அறிந்து கொள்வதற்கு வகை செய்யும் "கிறீனிங்" என்ற இயந்திரமும் நேற்று அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

தற்போது யாழ் வைத்தியசாலையில் ஒரேயொரு எக்ஸ்—கதிர் இயந்திரம் மட்டுமே இயங்கி வருவதால் நோயாளிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருவது தெரிந்ததே.

## கருத்துக் கலசம்

இலக்கியம், அது கடல் போன்றது. வரைவிலக்கணம் வகுக்க முடியாதது இலக்கியத்திற்குப் பலவாறு பொருள் கூறுவர்.

உள்ளத்து உணர்ச்சிகளை, எழுச்சிகளை எழுத்தில் பிரதிபலித்து வடிப்பதே இலக்கியம் என்பதும் அந்தப் பலதில் ஒன்றாகும்.

அடக்கி ஆளப்படுபவன், தனது அடிமைத் தளையைக் களைந்து சுதந்திரப் பறவையாக வாழ விரும்புகிறான்; அதற்காகப் போராடவும் செய்கிறான்.

அந்தப் போராட்ட காலத்தில் அவனது உள்ளக் குமுறலை எழுத்தில் வடிக்கத் துடிக்கிறான். சுதந்திரம் வேண்டி உரிமைப் போராட்டம் நடத்தப்படும் காலங்களில், எழுத்து பல வகைகளிலும் அதற்குத் துணை நிற்கிறது.

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் கவிமன்னன் ரவீந்திரநாத் தாகூரும், மகாகவி பாரதியாரும் பாடிய எழுச்சி மிக்க. உணர்ச்சி மிக்க கவிதைகள் பல. சுதந்திரத்தை நாடி உதித்த உத்வேகம் அந்தக் கவிதைகளில் மிளிர்கின்றது.

அதே உத்வேகத்தில் பிறக்கும் ஆக்க இலக்கியங்கள் எமது மண்ணில் இன்று நிறைய மலர்கின்றன.

குறிப்பாக துடிப்பு மிக்க இளைஞர்களின் உணர்ச்சிக் குவியல்கள் சுவரொட்டிகளாகவும், துண்டுப்பிரசுரங்களாகவும் பிறப்பெடுக்கின்றன.

புதிய இலக்கியம் சமைப்பதில் இளைஞர்கள் மட்டும் என்ன, மூத்த எழுத்தாளர்கள், கவிஞர்களும் பின்னிற்கவில்லை.

அரசாங்க வானொலியில் பணத்துக்குக் கவிதை பாடிய பலர், அதனைத் துறந்து மனத்திருப்திக்காக— ஆத்மதிருப்திக்காக மக்கள் இலக்கியம் படைக்கிறார்கள்.

சஞ்சீவிக்கெனவரும் எழுத்துக் கோலங்கள், அதனைக் கோடிட்டுக் காட்டுகின்றன. காலத்தோடு ஒட்டிய இலக்கியம் படைக்க எமது இலக்கிய கர்த்தாக்கள் பின்னிற்கவில்லை என்பது புலனாகின்றது.

"எங்கள் நெல்மணி எரியுது தீயில்!" – இப்படி ஒரு வசனத்தை ஒரு துண்டுப் பிரசுரத்தில் பார்த்தபோது வேதனை பிடித்தது.

இது அறுவடைக் காலம். மழை, வெயில் பாராது பாடுபட்டு உழவு செய்து விதைத்து, களைபிடுங்கி, பசளை இட்டு விவசாயிகள் தங்கள் கண்மணிபோல் பாதுகாத்த நெல்மணிகள் பல இடங்களில் தீயிடப்பட்டன.

அரசியல் பிரச்சினை ஒன்றுக்காகத் தமிழ் மக்கள் பொருளாதார சமூகத் துறைகளிலும் நசுக்கப்படுகிறார்கள்.

நெல் மூடைகளைக் கொள்ளை அடிப்பது, விவசாய உபகரணங்களை நாசம் செய்வது எல்லாம் தமிழ் மக்கள் பொருளாதாரத்தை

(8ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

★ பிந்திய செய்தி

### இவற்றுக்கு மரண தண்டனை

பயங்கர ஆயுதங்கள், கைக் குண்டுகள், நச்சு மருந்துகள், அபின் ஆகியவற்றை வைத்திருத்தல், உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் அல்லது விநியோகித்தல் ஆகியவை மரண தண்டனைக்கு உரிய குற்றங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்த விதிகளை ஜனாதிபதி நேற்றிரவு பிரகடனப் படுத்தினார்.

கற்பழித்தல், கப்பம் கேட்டல் ஆகிய குற்றங்களுக்கும் இனி மரண தண்டனை விதிக்கப்படும்.

### நாளை முதல் மீன் பிடிக்க தடை

கொழும்பு, மார்ச் 1

வடபகுதிக் கடற்பகுதியில் மீன் பிடிக்க முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

தலைமன்னார் பழைய இறங்குதுறை தொடக்கம் ஆனையிறவு சுண்டிக்குளம் வரையிலான கடற்பகுதியில் நாளை ஞாயிற்றுக்கிழமை 2 ஆம் திகதி முதல் இந்தத் தற்காலிகத் தடை அமுலுக்கு வருகிறது.

தேசிய பாதுகாப்பு அமைச்சு இதனை நேற்று அறிவித்தது.

யாழ்ப்பாணத்தில் கிழக்குப் பக்கமாக உள்ள கடற்பகுதி முழுவதும் தடை செய்யப்பட்ட பிரதேசமாகிறது. யாழ்ப்பாண ஏரியும் இதனுள் அடங்கும்.

இந்தத் தற்காலிகத் தடையினால் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

### கைது!

கொழும்பு, மார்ச் 1

வவுனியா தாண்டிக்குளத்தில் நேற்று வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஏழு தமிழர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

### லொறி கடத்தல்

கொழும்பு, மார்ச் 1

மாவனல்லையில் இருந்து வவுனியா வந்த லொறி ஒன்று வவுனியாவில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டது.

அந்த லொறியில் சுமார் 40,000 ரூபா பெறுமதியான பொருள்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

குண்டு ஒன்றைக் காட்டிப் பயமுறுத்தியே லொறி கடத்தப்பட்டதாம்.

### மட்டக்களப்பில் வயிற்றோட்டநோய்

மட்டக்களப்பு, இமிலை தீவுப் பகுதியில் வயிற்றோட்ட நோய் பரவி வருகிறது.

இரண்டுபேர் இதுவரை இந் நோய்க்குப் பலியாகி விட்டனர்.

### இன்று கண்காட்சி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் யாழ் பல்கலைக் கழக இயற்கை விஞ்ஞான மாணவர் மன்றத்தின் ஆதரவில் அபிவிருத்திக் கண்காட்சி இன்றும் நாளையும் நடைபெறவிருக்கிறது.

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுப் பிறப்பெடுத்துள்ள பிலிப்பீன்ஸ் அரசியல்

## அமெரிக்க அக்கறைகளுக்குள் அகப்பட்டு திசைமாறித் தடுமாறுமா?

பிலிப்பீன்ஸ் நாட்டுப்பிரச்சினைகள் சென்ற சில நாட்களாக உலக அரங்கில் பலமாக அடிபட்டது

பிரச்சினைகளுக்குக் காரணம் எனக் கருதப்பட்ட பேர்டினன்ட் மார்க்கோஸின் 20 வருட ஆட்சிக்கு இப்போது முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு விட்டது.

புதிய ஆட்சி, விதவையான திருமதிபெனிங்னோ அக்கியூனோவின் தலைமையில் பிரசவமாகியுள்ளது.

அங்கு நடந்த தேர்தலில் மற்றெல்லா நாடுகளையும் விட அமெரிக்கா காட்டிய ஆர்வம் மிக அலாதியானது. அந்த ஆர்வத்துக்குள்ள நல்லெண்ணம் தான் என்ன?

மார்க்கோஸின் ஆட்சியைத் தொடர்ந்து ஆதரித்து, போஷித்து வந்த நாடு என்று கூட அமெரிக்காவைக் கூறி விடலாம்.

**தேர்தல் சூடு பிடிப்பு**

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி தேர்தல் சூடுபிடித்துக் கொண்டிருந்தது.

மார்க்கோஸ் ஆதரவாளர்களுக்கும் திருமதி அக்கியூனோ ஆதரவாளர்களுக்கும் இடையில் துப்பாக்கிச் சூடுகளும் மோதல்களும் ஏற்பட்டன.

கம்யூனிஸ்ட் ஊடுருவல் நாட்டுக்குள் இருப்பதாக மார்க்கோஸ் குற்றச்சாட்டுக்களைக் கட்டவிழ்த்து விட்டார்.

அவதானத்துடனும் எச்சரிக்கையுடனும் தேர்தல் நடவடிக்கைகளை அவதானித்து வந்த அமெரிக்கா சும்மா இருக்குமா?

**கண்காணிப்புக் குழு**

வெளிநாட்டு உறவுகள் குழுவின் தலைவரான செனட்டர் றிச்சார்ட் லூகர் தலைமையில் குழுவொன்றை மணிலாவுக்கு அனுப்பி வைத்தது.

தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் குழுவாகவே மணிலாவை வந்தடைந்தது லூகர் குழு.

வந்த கையோடு நிலைமைகளை அவதானித்த லூகர் அதிகாரத்தில் இருக்கும் அரசு தரப்பில் ஊழல்களும் மோசடிகளும் நிறையவே நடப்பதாக அறிக்கையும் தயாரித்து விட்டார். அமெரிக்க அரசிடமும் அறிக்கை கையளிக்கப்பட்டது.

நடந்த தேர்தலின் முடிவை வெளியிடுவதில் அரசு தயக்கம் காட்டிக் கொண்டிருந்தது.

இந்த நிலையில் ஜனநாயக அரசொன்றை அமைக்கவும் குழப்பங்களைத் தவிர்க்கவும் உதவுமாறு திருமதி அக்கியூனோவிடம் அமெரிக்கா கோரிக்கை விடுத்தது.

**கொறுசன் கொதிப்பு**

அமெரிக்க அதிபர் கறேனின் அந்தக் கோரிக்கையில் மார்க்கோஸை ஜனாதிபதியாக அங்கீகரிக்கும் உள் எண்ணமே தொக்கி நின்றது என்பதை திருமதி அக்கியூனோ உணர்ந்து கொண்டார்.

இதனால் ஆத்திரமடைந்த அக்கியூனோ 'மக்களின் விருப்பத்துக்கு மாறாக அமெரிக்கா எனது வெற்றியை ஏமாற்றி விடப்பார்க்கிறது' என்று ஆத்திரப்பட்டார்.

இதற்கிடையே நிலைமைகளில் வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்தது. மக்கள் அங்கு வெறும் வாக்காளர்களாக மட்டும் இருந்து விடாமல் அநீதியை எதிர்க்கும் நடவடிக்கைகளில் பங்காளராகவும் மாறிக் கொண்டிருந்தனர்.

**அமெரிக்க அக்கறை**

அமெரிக்கா எப்பொழுதுமே பிலிப்பீன்ஸின் நெஞ்சில் தனது 'ஸ்ரெதஸ்கோப்' பை வைத்துக் கொண்டிருப்பதே வழக்கம்.

அமெரிக்காவின் இராணுவ உடல் நலம் எதுவும் பசுபிக் பிராந்தியத்தில் அதன் உடல் வளம் பாதிக்கப்படக்கூடாதென்பதுதான் பிலிப்பீன்ஸில் அமெரிக்கா காட்டும் அக்கறையின் மூலவேர்.

கிளார்க் விமானத் தளம், சூபிக்குடா கடற்படைத்தளம் ஆகிய பிரமாண்ட இராணுவத் தளங்களை அங்கு அமெரிக்கா வைத்துக் கொண்டிருக்கிறதே.

இந்தத் தளங்களுக்கு ஏதும் குந்தகங்கள் ஏற்படக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டே பிலிப்பீன்ஸ் அரசியல் அணுகுமுறைகளை அமெரிக்கா வகுக்கிறது.

புதிய கம்யூனிஸ்ட் மக்கள் இயக்கம் என்ற கெரில்லா இயக்கம் பிலிப்பீன்ஸில் வளர்ந்து வருவது அமெரிக்காவுக்குள்ள அடிப்படைத் தலையிடியாகும்.

திருமதி அக்கியூனோவை இந்த இயக்கம் ஜனாதிபதி தேர்தலில் ஆதரித்ததும் அமெரிக்காவுக்குத் தெரியும்.

**தந்திரோபாய விளையாட்டு**

தீவிரவாத சக்திகளை விடவும், மார்க்கோஸ் எதிர்ப்பு சக்திகள் திருமதி அக்கியூனோ பக்கத்தில் கூடுதலாக உள்ளதையும் அமெரிக்கா பகுப்பாய்வு செய்துவிட்டது.

நிலைமைகளை குறிப்பிட்ட காலத்துக்காவது கைக்குள் வைத்துக் கொண்டு தனது தந்திரோபாய விளையாட்டை நடாத்தத் திட்டமிட்ட அமெரிக்கா மார்க்கோஸ் பதவியிறங்குவதே பயனுள்ளதென அறிவித்தது

குழப்பங்களைக் கட்டவிழ்த்து விடும் இராஜதந்திரியெனக் கருதப்படும் பிலிப் ஹபீப்பையும் விசேட தூதுவராக மணிலாவுக்கு அமெரிக்கா இடையில் அனுப்பியிருந்தது

இந்த நிலைமைகளில் திருமதி அக்கியூனோவை ஆதரிக்கும் தீவிர மாற்றமொன்றை அமெரிக்கா வெளிப்படையாகவும் காட்டத் தவறவில்லை.

திருமதி அக்கியூனோவை ஜனாதிபதியாக அங்கீகரிப்பதில் முந்தி நின்ற அமெரிக்கா 'நண்பன் மார்க்கோஸ் அமெரிக்காவுக்கு வந்து தஞ்சமடைந்து வாழலாம்' எனவும் தெரிவித்தது

**மார்க்கோஸுக்கு பாதுகாப்பு**

கிளார்க் தளத்தில் ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்த விசேட விமானம் மார்க்கோஸையும் அவரது பரிவாரங்களையும் தனது குவாம் தீவு இராணுவத் தளத்துக்குப் பாதுகாப்பாகக் கொண்டு சென்று இறக்கியது.

எது எப்படி இருப்பினும், அவர் எங்கிருப்பினும் அமெரிக்க பாதுகாப்பில்தான் இருக்கிறார் என்பது தெளிவு.

அமெரிக்கா மார்க்கோஸுக்கும் பாதுகாவலன் அதே வேளை கொருசன் அக்கியூனோவுக்கும் ஆதரவு.

இந்த நிலையில் தான் மணிலாவின் அரசியல் சுதந்திரமான பாதையில் நடைபெற முடியுமா என்ற கேள்வி எழுகிறது.

**முரண்பாடுகள்**

கம்யூனிஸ்ட் கெரில்லாக்களின் தீவிர ஆதரவு அவருக்கு இருக்கிறதென்பது தெரிந்தும் கொருசனையும் கூட்டாளியாக்க அமெரிக்கா தொடர்ந்து முயலும் என்பது உண்மை.

1991 ஆம் ஆண்டு வரையான இராணுவத் தள ஒப்பந்தம் பற்றி திருமதி அக்கியூனோ தெரிவித்துள்ள கருத்து அமெரிக்காவுக்கு திருப்தி தரலாம்.

எனினும் நம்பிக்கையூட்டுவதாக இருக்க முடியாது.

பிலிப்பீன்ஸின் புதிய கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் போர் நிறுத்த ஒப்பந்தமொன்று செய்யப்படுமென திருமதி அக்கியூனோ ஜனாதிபதி பதவி ஏற்ற கையோடு அறிவித்திருக்கிறார்.

எனினும் அவரது பிரதம இராணுவத் தளபதியும் தீவிர அமெரிக்க ஆதரவாளராகக் கருதப்படுபவருமான பிடல் றமோஸ் கம்யூனிஸ்ட் கெரில்லாக்களின நடவடிக்கைகள் அடக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அச்சத்துக்குக் காரணமான பிலிப்பீன்ஸின் கம்யூனிஸ்ட் கெரில்லாக்களின் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டால் அமெரிக்கா தனது பிலிப்பீன்ஸ் கொள்கைகளில் தீவிர மாற்றங்களை நடைமுறைப்படுத்தக் கூடும்.

**இராணுவ தளங்கள்**

தனது சொந்தநாட்டுக்கு வெளியே அமெரிக்கா கொண்டுள்ள மிகப் பெரிய இராணுவத்தளம் பிலிப்பீன்ஸ் தளங்கள் தான்..

இந்தத் தளங்களை தாமாக இழக்க அமெரிக்கா விரும்பாது.

வியட்னாமிலும் 'கான்ருன்ஹ்நடா' தளத்தை அமெரிக்கா வைத்துக் கொண்டிருந்தது.

இப்பொழுது அதை இழந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் விடுபடாமலே இருக்கிறது.

இந்த நிலையில் பிலிப்பீன்ஸில் ஏற்படக்கூடிய அரசியல் மாற்றம் பற்றிய எச்சரிக்கையோடு தமது தளங்களை இடம் மாற்றம் செய்யவேண்டுமென அண்மையில் அமெரிக்க செனட்டில் கூறப்பட்டது.

'இடம்மாற்றம் இப்போதைக்கு தேவைப்படாது எமது தளங்கள் போதிய பலத்துடன் இருக்கின்றன. பயப்படத் தேவையில்லை' என அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஷுல்ட்ஸ் ஆறுதல் கூறியுள்ளார்.

**கேள்வி**

சென்ற ஆண்டு பிலிப்பீன்ஸில் அமெரிக்க இராணுவத் தளங்கள் பற்றி தளர்ச்சியோடு கருத்துத் தெரிவித்தவர் அமெரிக்க ஆயுதப்படைகளின் தலைமை அதிகாரி அட்மிரல் வில்லியம் குறோவ்.

அவர் இப்பொழுதும் 'பிலிப்பீன்ஸ் அரசியலின் மோசமான கட்டம் கடந்து விட்டது எனினும் முன் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டியது இன்னும் அவசியமாகும்' என்று அறிவுறுத்தியுள்ளார்.

இப்படியான இக்கட்டுகளுக்குள் மாட்டுப்பட்டுக் கொண்டிருக்கும் பிலிப்பீன்ஸ் அரசியல் எந்தத் திக்கில் இழுபடப் போகிறது என்பது கள்விக்குறிதான்.

- மு. சிவலிங்கம் -

# தாயக வளங்களை இனங்காட்ட தகுதியானதொரு கண்காட்சி

தமிழ் மக்களின் எதிர்காலம் ஒரு கேள்விக்குறி அல்ல. மாறாக நம்பிக்கை தரும் ஞாயிறு.

யாழ் பரியோவான் கல்லூரி வாயிலில் அபிவிருத்திக் கண்காட்சியைப் பார்க்க வரிசையில் நீண்ட நேரம் நிற்க வேண்டி இருந்தது. அப்போது கண்காட்சியைப் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த நண்பர் ஒருவர் இவ்வாறு எனக்குக் கூறினார்.

ஆம், தமிழர் தாயகத்தில் உள்ள வளங்கள் எவை? அவற்றை எப்படிப் பேணிக்காக்க வேண்டும்? அவற்றை எவ்வாறு விருத்தி செய்ய வேண்டும்? அவ்வாறு விருத்தி செய்தால் இங்கு வேலை வாய்ப்புகள் எப்படி அதிகரிக்கும்? எமது பொருளாதாரம் எப்படிப் பெருகும்? — இவற்றுக்கெல்லாம் விடை தருவதாக இக் கண்காட்சி அமைந்தது.

எமது பகுதிகளின் குடிசனப் பரம்பல் எப்படி அமைந்துள்ளது. அதை எப்படி சீரமைக்க வேண்டும், புதிய நகர நிர்மாணங்களை எங்கெல்லாம் அமைப்பது நலம் என்று இக்காண்காட்சி தெளிவாக்கியது

தாயகப் பிரதேசத்தில் தமிழர்கள் அகதிகள் ஆகிய பகுதிகள், அகதிகளின் எண்ணிக்கை விரிவாகத் தரப்பட்டு இருந்தன சுதந்திரம் அடைந்த காலந்தொட்டு தமிழ் பிரதேசங்களில் தொடங்கப்பெற்ற குடியேற்றங்கள் ஆகியவற்றின் விபரங்களையும் அறிய முடிந்தது.

வீட்டுத் தோட்டம், கால்நடை வளர்ச்சி, கைத்தொழில்கள் மூலம் நம்மவர்கள் சிறிய அளவில் சுய வேலை வாய்ப்புக்களை எப்படிப் பெறலாம் என்ற தகவல்களும் தரப்பட்டு இருந்தன.

குடிசனப் பரம்பல் நிலப்பரம்பலும் பயன்பாடும், மண்,நீர் வளங்களும் பயன்பாடும், விவசாயம், மீன்பிடித்துறை, கால்நடை வளர்ச்சி, கைத்தொழில், வலு வளங்கள், தொடர்பாடல் சாதனங்கள், உல்லாசப் பயணத்துறை, வைத்தியத்துறை, பனை வளம், இலத்திரலியல், இப்படிப் பல்வேறு அம்சங்களைத் தத்ரூபமாக விளக்குவதாக அமைந்தது இக்கண்காட்சி.

தத்துவக் கோட்பாடுகளிலே திளைத்து, சிந்தனைச் சிறகுகளை விரித்து, விழுமிய பண்பாட்டுச் சிகரங்களை எட்டிப் பிடிக்கும் அதேவேளையில், பல்கலைக்கழகங்களுக்கு சமுதாயப் பார்வை வேண்டும் அவை சமுதாயப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.

அண்ணமைல பல்கலைக் கழகத்து பட்டமளிப்பு விழாவில் நிகழ்த்திய ஆங்கிலச் சிறப்புரையில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தமது பிரதேச மக்களின் சமூக, பொருளாதார பண்பாட்டுக் கூறுகளை வளம்படுத்த எடுக்கும் முயற்சிகளைக் காணும் போது 'அண்ணாவின் கனவை நனவாக்கும் நல்ல தம்பிமார்' என்று இவர்களைப் பாராட்டத் தோன்றுகிறது.

### பரியோவான் கல்லூரிக் களத்தில்
### யாழ். பல்கலைக்கழக மாணவர் சாதனை

தமிழர் பிரதேசத்தில் எத்தகைய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கலாம் என்ற தரவுகள், தகவல்களையும் அவை யூகமாக தொழில் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாகவும் இக்கண்காட்சி அமைகின்றது.

யாழ் செயலகம், விவசாயத் திணைக்களம், பனை அபிவிருத்திச்சபை, யாழ் பல்கலைக் கழகம், பரியோவான் கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி, டைனமிக் இஞ்ஜினியரிங், ஆனோ பல் இஞ்ஜினியரிங், ரெக்னோலொஜி சேர்விஸ், யாழ்ப்பாண மருத்துவச் சங்கம், ஏனைய உள்ளூர் உற்பத்தி நிறுவனங்கள் இக்கண்காட்சிக்கு உதவி உள்ளன.

யாழ்பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பாடசாலை மாணவ மாணவிகள், ஆண்கள், பெண்கள், இளையோர் முதியோர் என்று பெருந் தொகையானோர் சகல தினங்களும் குவிந்து கொண்டு இருந்தனர்.

கொட்டும் மழையில் நனைந்து கொண்டும், குடை பிடித்துக் கொண்டும் வரிசையில் நின்று இவர்கள் உள்ளே நுழைந்தார்கள் என்றால் இக்கண்காட்சி மக்களிடையே ஏற்படுத்திய ஈடுபாட்டை என்னென்பது?

மக்கள் வருகை கண்டு, அவர்கள் ஈடுபாடு காரணமாக இக்கண்காட்சி நீடிக்கப்பட வேண்டியதாயிற்று.

இக்கண்காட்சியை நன்கு திட்டமிட்டு செவ்வனே நடத்தி, மக்களுக்கு நல்விருந்து அளித்தவர்கள் யாழ் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான மன்றத்தினர்.

'பலே சாமர்த்தியசாலிகள்' என்று அவர்களை சஞ்சீவி பாராட்டுகிறது.

★ தங்கவேலாயுதபுரம் படுகொலை:—

# பிரஜைகள் குழுக்கள் சாட்சியம் அளிக்க மறுத்துவிட்டன

## விசாரணைக்குழு மட்டக்களப்பில் வந்துநிற்கிறது

மட்டக்களப்பு, மார்ச் .1

தங்கவேலாயுதபுரம் படுகொலை சம்பவம் தொடர்பாக அரசு நியமித்தமுப்படை அதிகாரி குழுவின் முன் சாட்சியமளிக்க மட்டக்களப்பு, அக்கரைப்பற்றுப் பிரஜைகள் குழுக்கள் மறுத்துவிட்டன.

முப்படை அதிகாரிகள் குழு வியாழன் காலை ஹெலிக்கொப்டர் மூலம் மட்டக்களப்பு சென்றது.

கல்லடி ஆயுதப்படை முகாமில் தங்கியிருந்த குழு உறுப்பினர்கள், தங்களை வந்து சந்திக்கும்படி மட்டக்களப்புப் பிரஜைகள் குழுவுக்குத் தகவல் அனுப்பினர்.

அதற்கு இணங்க பிரஜைகள் குழு உபதலைவர் வண. பிதா சந்திரா பெர்னாண்டோ, செயலாளர் திரு சாம் தம்பிமுத்து ஆகியோர் கல்லடி முகாமுக்குச் சென்று விசாரணைக் குழுவைச் சந்தித்தனர்.

விசாரணைக் குழு முன்னர் தாங்கள் சாட்சியமளிக்க முடியாது என்று கூறிய இருவரும் அதற்கான காரணங்கள் கொண்ட அறிக்கையை விசாரணைக் குழுவிடம் கையளித்தனர்.

அறிக்கை வருமாறு:-

படுகொலைச் சம்பவம் குறித்து இராணுவத் தளபதி ஏற்கனவே விசாரித்து அபிப்பிராயமும் வெளியிட்டு விட்டார். அவரின் கீழ்ப்பணியாற்றும் சிலரைக் கொண்ட விசாரணைக் குழுவினால் தளபதியின் அறிக்கையைச் சரி, பிழை பார்க்க முடியாது.

விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது பற்றியோ அக்குழுவுக்குள்ள அதிகாரங்கள் பற்றியோ எமக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

நீதி நிலைநாட்டப்படவேண்டும். கண்ணால் கண்ட சாட்சிகள் சாட்சியமளித்தால் அவர்களை வெளியே தெரியப்படுத்தக் கூடாது. இது தெரியாத நிலையில் அவர்கள் சாட்சியமளிக்க முடியாது.

கண்காணிப்புக் குழுவில் இருந்த 2 தமிழ் உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்து விட்டனர். இருந்தாலும் கண்காணிப்புக் குழு வந்து விசாரணை நடத்தினால் அதற்கு நாம் பூரண ஆதரவு வழங்குவோம்—

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

அக்கரைப்பற்றுப் பிரஜைகள் குழுவினரும் முப்படை அதிகாரிகள் விசாரணைக் குழுவின் முன்னால் சாட்சியம் அளிக்க மறுத்துவிட்டனர்.

இத்தகவலை அக்கரைப்பற்றுக் குழு, மட்டக்களப்புப் பிரஜைகள் குழுவுக்கு அறிவித்துள்ளது

இதனிடையில் முப்படை அதிகாரி விசாரணைக் குழு தங்கவேலாயுதபுரம் சென்று சம்பவம் நடந்த இடத்தைப் பார்வை இட்டது

ஹெலிக்கொப்டரில் சம்பவம் நடந்த இடத்துக்குச் செல்ல மட்டக்களப்புப் பிரஜைகள் குழு உறுப்பினர்களை விசாரணைக் குழுவினர் அழைத்திருந்தனர். அதற்குப் பிரஜைகள் குழுவினர் மறுத்துவிட்டனர்.

### ஐ நா. அகதிகள் ஆணையாளர் கொழும்பில்

கொழும்பு, மார்ச். 1

ஐக்கியநாடுகள் அகதிகள் புனர்வாழ்வு ஆணையாளர் திரு. மக்மூட் வியாழனன்று கொழும்பு வந்தார்.

# போராளிகள் மோதினால் அரசும் தயார்

## இப்படி டிக்ஸிற்றிடம் ஜே. ஆர். கூறினராம்

கொழும்பு,மார்ச். 1

போராளிகள் மோதினால் அரசும் மோதத் தயார்.

பேச்சுக்களின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் அரசு தயாராக உள்ளது

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா இந்தியத் தூதர் திரு டிக்ஸிற்றிடம் தெரிவித்தாராம்.

திரு.ஜெயவர்த்தனாவே இத்தகவலை தமக்கு நெருங்கிய பல அமைச்சர்களிடம் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

டிக்ஸிற் - ஜனாதிபதி சந்திப்புக் குறித்து அரசியல் வட்டாரங்களில் பெரும் ஆர்வத்துடன் பேசப்பட்டு வந்தது.

அச்சந்திப்பின் போது இப்படித்தான் திரு டிக்ஸிற்றிடம் சொன்னதாக அமைச்சர்களிடம் தெரிவிக்கப்பட்டதாம்.

### போராளிகளை ஒன்றும் செய்யமுடியாது என்கிறார் முன்னாள் பிரிட்டிஷ் அமைச்சர்

கொழும்பு, மார்ச், 1

போராளிகளை நீங்கள் ஒன்றும்செய்யமுடியாது.

தமிழர்கள் மத்தியில் போராளிகளுக்கு நிறைய ஆதரவு உண்டு.

பிரிட்டிஷ் முன்னாள் பெண் அமைச்சர் ஜுடித் ஹார்ட் இப்படி இலங்கை அரசுத் தலைவர்களிடம் தெரிவித்தார்.

இத்தகவலை அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த சமயம் ராஜாங்க அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கலாநிதி ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் சொன்னார்

தென்ஆபிரிக்க பிஷப் டெஸ்மண்ட் டுட்டு தலைமையில் அனைத்துலக மனித உரிமை விழிப்பு இயக்கம் இலங்கை அரசுக்கு நிதி உதவி செய்ய வேண்டாம் என்று ஒவ்வொரு நாட்டையும் கோருவது என்று தீர்மானம் எடுத்து உள்ளது குறித்தும் அமைச்சர் கருத்து வெளியிட்டார்.

மனித உரிமை விழிப்பு இயக்கத்தின் இந்த முடிவு இலங்கை அரசுக்கு மனவேதனையைத் தந்துள்ளது.

இந்த அமைப்பின் சார்பில் முன்னாள் பிரிட்டிஷ் அமைச்சர் ஜுடித் ஹார்ட் இலங்கைக்கு அண்மையில் வந்து இருந்தார்.

அவர் இலங்கை வரும் முன்னரே அந்த அமைப்பு மேற்கண்ட முடிவை எடுத்துவிட்டது.

இலங்கைத் தமிழர் மத்தியில் போராளிகளுக்கு நல்ல ஆதரவு உண்டு என்று முன்னாள் அமைச்சர் ஜுடித் ஹார்ட் எம்மிடம் தெரிவித்தார்.

"நிலை அப்படி அல்ல. தமிழரிடையே போராளிகளுக்கு ஆதரவு இல்லை என்று நாம் அவருக்கு விளங்கப்படுத்தினோம்.

மனித உரிமை விழிப்பு இயக்கம் எடுத்த முடிவு இலங்கை அரசைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் எடுக்கப்பட்ட ஒன்றாகும்.

இப்படி அமைச்சர் சொன்னார்.

பதவி வெற்றிடம்
பயிற்றப்பட்ட மருத்துவத் தாதி

விரைவில் ஆரம்பிக்கவுள்ள மருத்துவ நிலயத்திற்கு இரண்டு (2) மருத்துவத் தாதிமார் உடனடியாகத் தேவை. காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை 07-03-86க்கு முன் சான்றிதழ்களுடன் நேரில் வரவும் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

Rainbow Travels
ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

ROCK ENGINEERS & CONTRACTORS
IN
WATER SUPPLY & DRAINAGE WORKS
Contact us for the following Services:

(1) TUBE WELLS
(2) SHALLOW WELLS
(3) CHANNEL WELLS
(4) OPEN WELLS
(5) PURE WATER FISH BREEDING POOLS—

Free Site investigation on underground water for the customers

ROCK ENGINEERS
Point-Pedro Road,
KOPAY.
Branch at: Near Karaveddy Post Office
KODIKAMAM ROAD, NELLIYADY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவொளி தரும் திருவந்தாதி
# உள்ளம் உருக்கும் அருள்மருந்து

பௌராணிக வித்தகர்
**வ. குகசர்மா**

காரைக்காலம்மையார் முதலிற் பாடியது இந்த அற்புதத் திருவந்தாதி என்பர். ஓதுவார்க்கு எளிதில் கருத்து விளங்கக் கூடியது. அம்மையார் தாம் பெற்ற மெய்யறிவினை உலகத்தார்க்கு அறிவுறுத்தும் பாடல்கள் பல இதனுள் உண்டு. சைவசமயத்தில் பிரதானமாகக் கூறப்படும் அன்பின் தன்மையை இப்பாடல்களில் அறியமுடிகிறது.

உலகத்திலே பொருளைச் சேமிப்பதற்கு வங்கிகள் உள்ளன. பணத்தைப் பெருக்குவதற்கு வங்கிகள் உதவுவது போல அன்பைப்பெருக்குவதற்கு நெஞ்சு இடமாகப் பொருந்துகிறது. வங்கியிலே சேமிப்புப்பணம் அதாவது பாதுகாப்புப் பணம் போடப்படுகிறது.

## ஞானப் பேரறிவாம் சிவத்தை உணர பேரன்பு நெஞ்சில் பெருகவேண்டும்

இங்கே உள்ளத்தில் இறைவன் அன்பை வளர்ப்பதால் பெரும் சேமம் அதாவது பெரும் காவல் பெறுகிறோம். எனவே நாம் நன்றாக இடையூறு இன்றி வாழ வேண்டுமானால் இறை அன்பை மேலும் மேலும் பெருக்க வேண்டும்.

அந்தச் சிவபெருமான் இறந்தவருடைய எலும்புகளைத் தரித்திருக்கிறார். அது யாருடைய எலும்பு என்பது எங்களுக்குத் தேவையில்லை. அவற்றிற்கெல்லாம் காரணமுண்டு. அதை ஆராய்வதை விடுத்து அதை இகழாமல் அன்பையே மேலும் பெருக்கவேண்டும். உலக வழக்கிலே பொருளைத் தேடிச் சேர்த்து வைத்திருப்பவன் பல வழிகளில் அதைப் பெருக்க வேண்டும் நினைக்கிறான். அந்த மனநிலை அன்பிலும் ஏற்பட வேண்டும். அதை மேலும் பெருக்க அவாக் கொள்ள வேண்டும்.

"மகிழ்ந்தி மடநெஞ்சே மானுடரில் நீயும் நிகழ்ந்தி பெருஞ்சேமம் செய்தாய் — இகழாதே யரென்பே யேனும் அணிந்துழல்வார்க்காட் பட்ட பேரன்பே யென்னும் பெருக்கு"

நமது துன்பங்களுக்கெல்லாம் காரணம் தீவினை. தீவினையை நீக்கும் தன்மை வாய்ந்தது சிவபெருமானுடைய அருள். சிவபெருமான் அறிவு வடிவானவர். அறிவு வடிவானவரை சாதாரண கல்வி அறிவாலே பற்றலாம் என நினைப்பது தவறு. ஞான அறிவினாலே தான் பற்றலாம். பிற உவமை இல்லா ஒளி அறிவு வடிவினர்சிவபெருமான். அவரைத் துணை கொள்வதற்கு இருவழிகளை ஒரு வெண்பாவில் அம்மையார் கூறுகிறார். ஒன்று நாவால் அவருக்கு பாமாலை சூடித்துதித்தல் மற்றது அன்பாகப் பொன்னடிக்குப் பூமாலை புனைதல். இதையே நாவுக்கரசரும் 'பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி' என்று கூறினர். 'நாமாலை சூடியும் நம்மீசன் பொன்னடிக்கே, பூமாலை கொண்டு புனைந்தன்பால் — நாமோர் அறி

வினையே பற்றினால் எற்றே தருமே எறிவினையே என்னுமிருள்'

மானிடப் பிறவி இறைவனையடையும் நோக்கோடு வகுக்கப்பட்டது. அந்த நோக்கப்படி காரைக்காலம்மையார் முதலிய அடியார்கள் முயற்சி செய்தார்கள். இறைவனை அன்பென்னும் போர்வையால் போர்த்தார்கள். 'தாயம்' என்ற கருத்துள்ள பிறப்புரிமையால் பக்தியுள்ள ஒப்பற்ற நெஞ்சில் மதிப்போடு வைத்திருக்கிறார்கள். அப்போது அடியார்களுக்கு ஒரு இறுமாப்பு உண்டாகின்றது. 'யார் வல்லார்' இவ்வாறு செய்ய என நினைக்கிறார்கள். இதுவே தொடக்கமாக வெண்பா பாடப்படுகிறது. இந்த வெண்பாவால் காரைக்காலம்மையார் எல்லா அடியார்களையும் சேர்த்துப் பன்மையில் பாடுகிறார்.

'ஆர்வல்லார் காண அரன்றனை அன்பென்னும் போர்வை யதனாலே போர்த்தமைத்துச் சீர்வல்ல தாயத்தால் நாமுந் தனிநெஞ்சினுள்ளடைத்து மாயத்தால் வைத்தோம் மதித்து'.

அன்பின் உச்சநிலையையும் அதே நேரம் ஓர்கடப்பசட்டினையும் மற்றோர் வெண்பாவில் பார்க்கிறோம். சிவபெருமான் எங்களை ஆட்கொள்ள வேண்டும். பிறவித் துன்பம் களைய வேண்டும். செல்லும் வழியைக் காட்டவேண்டும். இதற்காகத்தான் வேண்டி வணங்குவார்கள் அடியார்கள். ஆனால் அவர்கள் வேண்டிய இவை யாவையும் இறைவன் அருள் புரியாவிட்டால் என்ன செய்வது? அதற்காகஇறைவனிடம் அன்பு செலுத்தாமல் இருக்க அடியார்களால் முடியாது. இதுதான் பிரதியுபகாரம் கருதாச் சிறந்த அன்பு. வீரஅன்பு என்று பெரியபுராணம் கூறும். இந்த வைராக்கியம் நிறைந்த அன்பிற்கு இறைவன் அருள்செய்யாதிருக்கத்தான் முடியுமா?

'இடர்களை யாரேனும் எமக்கிரங்கா ரேனும் படரும் நெறிபணியா ரேனும் — சுடருருவில் என்பறாக் கோலத் தெரியாடும் எம்மனார்க் கன்பறா தென்நெஞ்சவர்க்கு'

---

இலங்கையுடனான உறவு

# ராஜீவ் காந்தியின் அணுகு முறையில் திடீர் திருப்பம்

மூலம்:
**மேர்வின்**
தமிழில்:
**எஸ். ஜி.**

இலங்கை அரசின் 57 பக்கப் பதிலைப் பார்த்த பின்னர் தான் திரு. பண்டாரி தனது இலங்கை விஜயத்தை ரத்துச் செய்தார் என்றில்லை.

இலங்கை மீதான இந்தியாவின் தற்போதைய கடும் போக்கு, இந்திய அமைச்சரவையின் அரசியல் விவகாரக் கமிட்டியினால் உருவாக்கப்பட்டது.

"இலங்கை - இந்திய உறவுகள்: பிரச்சினையில் ஒரு முக்கிய திருப்பம்?" - என்ற தலைப்பில் 'லங்கா கார்டியன்' ஆங்கில சஞ்சிகையில் இலங்கையின் பிரபல பத்திரிகையாளர் திரு. மெர்வின் டீ சில்வா கட்டுரை ஒன்று எழுதியிருக்கின்றார்.

அக்கட்டுரையிலேயே மேற்கண்ட தகவல் வெளியாகியுள்ளன.

அக்கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.

இந்தியாவின் மத்தியஸ்தத்தை இலங்கை இன்னும் விரும்புகின்றதா?

மாலைதீவில் வைத்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இப்படிக் கேட்டார்.

உண்மையில், பிரதமர் காந்தி பலபடிகள் மேலே போய் விட்டார். இந்திய அரசும் பல படி மேலே போய் விட்டது.

"விரும்பினால் எடுத்துக் கொள்; இல்லை என்றால் விட்டுவிடு" - என்ற இந்தியாவின் கடுமையான போக்கு, இந்திய அமைச்சரவையின் சக்தி மிகுந்த அரசியல் விவகார கமிட்டியினால் உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

புதுடில்லியில் உள்ள அனுபவம் வாய்ந்த வெளிநாட்டு செய்தியாளர்கள் மத்தியில் நிலவும் கருத்து இது.

ஆனால் ஒரு விஷயம் தான் டில்லியில் உள்ள ராஜதந்திரிகள், இந்திய-வெளிநாட்டு ராஜதந்திரிகள் ஆகியோரைக் குழப்பியுள்ளது.

### குடியுரிமை விவகாரம்

குடியுரிமை வழங்கும் விஷயத்தை திரு. ஜெயவர்த்தன கையாண்ட விதம், அது சம்பந்தமான எதிர்ப்புகளைச் சமாளித்த விதம், தோட்டங்களில் ஏற்பட்ட வன்செயல்களை அடக்கிய முறை ஆகியவற்றுக்காக திரு. ஜெயவர்த்தனவை இந்திய தரப்பினர் பாராட்டிய அதே சமயத்தில், இந்தியா ஏன் இந்தக் கடும் போக்கை அனுஷ்டிக்கிறது? என்பது தான் புதிராக உள்ளது.

மலையகத் தமிழர் குடியுரிமை விஷயத்தில் திரு. ஜெயவர்த்தன காட்டிய துரிதவேகத்தை திரு. ராஜீவ் காந்தி பாராட்டிய முறையில் நல்லெண்ணம் பொதிந்து இருந்ததாகச் சொல்ல முடியவில்லை.

திரு. ஜெயவர்த்தன மலையகத் தமிழர் குடியுரிமைச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய வேகம், அதற்கு பௌத்த சங்கம் தெரிவித்த எதிர்ப்பை முறியடித்த விதம் பற்றிய இந்தியப் பாராட்டுதல் நல்லெண்ணம் பொருந்தியதாக இருக்கவில்லை.

இது பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஒருவரின் கருத்து.

ஆனால் இனப்பிரச்சினை விஷயத்திலோ ஜெயவர்த்தன அரசு நடந்து கொள்ளும் முறை முரணாக உள்ளது என்பதும் உணரப்பட்டது.

இது தான் கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையில் காணப்படும் 'நம்பிக்கையீனத்தின்

( 6ஆம் பக்கம் பார்க்க)

---

# மலையகத்தின் ஆரம்ப நிலையும் மலர்ந்துவரும் புதிய எழுச்சியும்

**நடேசன் தம்பிராஜா**

ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டிற்கு முன்பிருந்து இவர்களது வரலாறு ஆரம்பமாகிறது. தென்னிந்தியாவிலிருந்து வந்து

## சமத்துவமான சமூகமயமாதலையே அவர்கள் விரும்புகிறார்கள்

மத்திய மலைநாட்டில் பெருந்தோட்டங்களை உருவாக்கினார்கள். அன்றிலிருந்து அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட வரட்சி சொல்லொணாத் துன்பங்கள், துயரங்கள் எண்ணிலடங்காது. இருண்டு அடர்ந்த காடுகளை அழித்துப் பெருந்தோட்டங்களை உருவாக்கி இலங்கையில் இன்றைய பொருளாதாரத்தை நிர்ணயிக்கின்ற ஆணிவேராக இருக்கின்றார்கள். மலையகத்தவரின் கரங்கள் இயங்க மறுத்தால் இலங்கையில் பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கத்தையும் முழு இலங்கையும் அறியும். அந்த மாதிரியான நிலைப்பாட்டையுருவாக்கிய அவர்களின் வாழ்க்கை உயர்ச்சியை மதிப்பீடு செய்யும்போது உருப்படியான ஒரு படியாவது உயர்ச்சிக்காக, முன்னேற்றத்துக்காக இந்த அரசாங்கம் உதவியதாகத் தெரியவில்லை. ஆனால் காலத்துக்குக் காலம் கழுத்தறுப்பு நடந்திருப்பதை வரலாறு சொல்லும்.

ஆரம்பத்தில் அடிமைகளைப்போல ஆக்கப்பட்டு ஒதுக்கித் தள்ளப்பட்ட இவர்கள், இலங்கையில் முழுச் சமூகத்தவர்களாலும் கொத்தடிமைகளாகப் பாவிக்கப்பட்டுவந்துள்ளனர். அவர்களை 'மனிதப் பிறவிகள்' என்ற பதத்தில் வைத்து மதிக்கவே கூச்சப்பட்ட சமூகமும் ஒரு புறம் இருந்தது, மனிதர்களாக மதிக்கப்பட்டிருந்தால், அவர்களில் அக்கறை கொண்டிருந்தால் அவர்களின் கல்வியில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கும். அவர்கள் நிலை உயர்ந்திருக்கும். குடிமனை வசதிகள், சுகாதாரத்தில் அக்கறை கொண்டு நிரந்தரமான சமூக மயமாக்கல் நடைபெற்றிருக்கும். அவர்களை சம்பந்தப்பட்டவர்கள் வெறுமனே உழைக்கின்ற வர்க்கமாக மாத்திரம் கருதினார்கள். அதுதான் ஆட்சிக்குட்பட்டவர்களின் அடித்தளத்திலிருந்த அசைக்க முடியாத எண்ணக் கருத்தாகவும் இருந்து வந்திருக்கிறது.

அது மட்டுமா? தமிழ்த் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டவர்களும் அரசின் அடிவருடிகளாகவும் முதலாளித்துவ சிந்தனையும் கொண்டவர்களாகவிருந்த தமிழ்ப் பிரதேசத் தலைவர்கள் சிலர் உழைக்கின்ற வர்க்கத்திற்கு குடியுரிமை எதற்கு என்று கூறி அரசாங்கம் என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததோ அதை முழுமனதோடு ஆதரித்து அவர்களின் குடியுரிமையில் மண்ணை அள்ளிப் போட்ட சம்பவம் முழு உலகத் தமிழருக்குமே தெரியும். இந்தியா கூட இம்மக்களின் விடயத்தில் ஏனோதானோ என்று அக்கறையில்லாமல் இருக்கும் விடயம் புதிராகவே இருக்கின்றது.

ஆனால் அவர்களது தற்போதைய நிலைப்பாடு வேறு. மலையக மக்கள் எல்லோரும் விழித்துக் கொண்டார்கள். அவர்கள் புரிந்துணர்கின்ற தன்மையை அடைந்து விட்டார்கள். அவர்களது சொந்த முயற்சியால் ஏற்பட்ட இந்த மாற்றம், முன்னேற்றம் எவராலும் அழிக்க முடியாத நிலைப்பாட்டை உருவாக்கியுள்ளது. தொழிலாளர்களுடைய பிரச்சினைகளுக்கு குரல் கொடுப்போம் என்று எழுந்த தொழிற்சங்கங்கள் எல்லாம் வெறுமனே சந்தாப் பணத்துக்காக அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக இயங்கியவையே மட்டுமல்லாமல் மலையகத்தவரின் அடிப்படை ஜீவாதாரப் பிரச்சினைகளுக்கு முழுமையாகப் பங்களிப்பைச் செய்யவில்லை.

காலத்துக்குக் காலம் தேர்த்திருவிழா போல் 1958, 1972, 1977, 1978, 1979, 1981, 1983 ஆண்டுகளில் இந்த உழைக்கின்ற வர்க்கங்கள் மீது சிங்களப் பேரினவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட காடைத் தனங்களால் கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்பு போன்ற சம்பவங்கள் இடம் பெற்றன. இன்னும் இடம்பெறவே செய்கின்றன. அவர்கள் காலமெல்லாம் தேடி வைத்திருந்த சொத்துக்கள் எல்லாவற்றையும் இழந்தார்கள். உடன் பிறப்புகளை இழந்து அநாதைகளானார்கள். இன்றோ இப்படியான கட்டவிழ்ப்புகளுக்கும் மிலேச்சத்தனமான, அடாவடித்தனமான சம்பவங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்க இந்தப் பாட்டாளிகள் கங்கணம் கட்டி விட்டார்கள். அவ்வாறான சம்பவங்கள் தொடராமலிருக்கத் தங்களை ஒரு கட்டுக் கோப்புக்குள் ஸ்தாபனப்படுத்திக் கொண்டார்கள்.

மேடைகளில் சிலர் அலட்டிக் கொள்வது போல்,பயப்படுவதுபோல் நிச்சயமாக அவர்கள் 'மலைநாடு' கேட்கவில்லை. தங்கள் வாழ்க்கையில் தன்மானமிக்க தமிழர் தாம் என்பதை நிரூபித்து தாங்கள் எதிலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதைப் புரிய வைத்து உயர்ச்சியையும் பாதுகாப்பையும் உறுதி செய்யவும் சமத்துவமான சமூகமயமாக்கலையுமே அவர்கள் விரும்புகிறார்கள்.

கூர்மையடைந்து வரும் அவர்கள் 'வாழ்க்கை உயர்ச்சி'ப் போராட்டத்தின் ஆரம்ப வடிவம் வெற்றி கண்டது போல் அது தொடர்ந்து முனைப்படைந்து முன்னேறுவதில் தான் மேலும் பெறக்கூடிய பயன்பாடு தங்கி இருக்கின்றது.

ஒரே இலட்சியத்தின் கீழ், சமூக விழுமியங்கள் சரிந்து போகாமல் பார்த்துக் கொண்டு நடைமுறைக்குச் சாத்தியமான வழிமுறைகளோடு போராட்டம் தொடர வேண்டும்.

### பொய்யும் கொலை களவும் ஒழிக

பொய்யுங்கொலைகளவும் ஒழிக — நாட்டில்
செய்யும் தொழில்துறைகள் எங்கும்
வையம் புகழுந்தொண்டு செய்க — மக்கள்
வாழ்வைக் குலைக்கும் வறுமை ஒழிக.

பாலில் தண்ணீர்கல வாதே — அந்தப்
பணத்தால் உனக்குவரும் நீதே
வேலி பயிரைமேய லாமோ — உன்
விரலை நீயேவெட்ட லாமோ.

எங்கும் கலப்படமாய்ப் போச்சே — தொழில்
எதிலும் கலப்படமாய்ப் போச்சே
கங்கு கரைசிறிது மின்றிக் — கலி
காலம் பெருகிவரு குதையே.

காசைப் பெரிதாய்மதி யாதே — தொழிலில்
கள்ளங் கபடமுத வாதே
மாசை வளர்த்துவரு வோரை — உலகில்
மனிதப் பிறவியென லாமோ

அமரர் பெ. பொ. சிவசேகரம்
[illegible]

---

# வட மாநிலத்துக்கு வருகிறார் புதிய கல்விப் பணிப்பாளர்

★ **வி. வரதசுந்தரம்** ★

வடபிரதேச கல்விப் பணிப்பாளராக இன்று கடமை ஏற்கும் திரு. இராமுப்பிள்ளை சுந்தரலிங்கம்தான் நமது இவ் வாரத்துப் பிரமுகர்.

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. இ. சுந்தரலிங்கம் காட்சிக்கு எளியனாக இன்சொலனாக விளங்குகிறார்.

### மாணவர் கல்வி

'நாட்டிலே பரவலாக உள்ள அச்ச உணர்வு, பாதுகாப்பின்மை எமது சிறார்களைப் பெரிதும் பாதிக்கிறது. மாணவர்களின் எதிர்காலம் ஒரு கேள்விக் குறியாக இருப்பதால், அவர்களின் மனப்பாங்கு கல்விக்குத் தடையாக இருக்கக் காண்கிறோம்' என்பது அவரது கவலை.

'இருப்பினும், பாடசாலையும் சமூகமும் மாணவர்களுக்குத் தெம்பூட்டி, தமது வளர்ச்சிக்குத் தாமே பொறுப்பு என்று அவர்களை உணரச் செய்ய வேண்டும்' என்று கருதும் அவர் கூறிய கருத்துக்கள் இதோ:

ஓர் ஆசிரியன் தனது சொந்தக் குழந்தையை எத்தகைய அபிலாஷைகளுடன் பாடசாலைக்கு அனுப்புகிறானோ அதே வித கனவுகளுடன்தான் சகல பெற்றோர்களும் தத்தம் குழந்தைகளையும் படிக்க அனுப்புகிறார்கள். இத்தகைய உணர்வு ஆசிரியர்களுக்கு ஏற்படின் மாணவர் கல்வியில் ஆசிரியரின் சிரத்தை அதிகரிக்கும்.

தமிழரின் அருமந்த சொத்து கல்வி. அதனைக் கண்ணேபோல் காத்து வளர்க்கும் பாரிய பொறுப்பு இன்று ஆசிரியர்களைச் சார்ந்தது.

எனவே ஆசிரியர்கள் பாடங்களை நன்கு தயாரித்து, வேளையோடு பாடசாலை சென்று தமது கடமைகளை ஆற்ற வேண்டும். நல்ல பெறுபேறுகளைப் பெற முயல வேண்டும். பெறுபேறுகள் குறையும் இடத்து மாணவர்கள் குறைபாட்டை நீக்க உரிய நடவடிக்கை எடுப்பது அவசியம்.

ஆசிரியர்கள் தொடர்ந்து படித்துக் கொண்டு இருக்க வேண்டும். புதிய படிப்பித்தல் முறைகளைப் பயில வேண்டும். அந்த அடிப்படையில் புதிய

## 'பாடசாலையும் சமூகமும் மாணவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்ட வேண்டும்' என்கிறார்

எண்ணக் கருக்களை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

ஆசிரியர்களிடம் இருந்து இவற்றை நாம் எதிர்பார்க்கும் அதே வேளையில் அவர்கள் எத்துணை கஷ்டங்களுக்கு மத்தியில் கடமை புரிகிறார்கள் என்பதை மறக்கக் கூடாது.

போக்குவரத்துக் கஷ்டம், உயிராபத்து போன்ற அச்சுறுத்தல்கள் மத்தியில் ஆசிரியர்கள் தமது கடமைகளைச் செய்கிறார்கள். ஒரு வகுப்பின் ஆகக்கூடிய எண்ணிக்கை



35 என்று நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இவ் வெண்ணிக்கைக்கு அதிகமான மாணவர்கள் உள்ள வகுப்புகளை இவர்கள் நடத்துகிறார்கள்.

இதனால் கற்பித்தல் செயற்பாடுகளிலும், அப்பியாசங்களைத் திருத்துவதிலும், மாதாந்தத் தேர்வுகளை ஒழுங்காக நடத்துவதிலும், பெறுபேறுகளைத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதிலும், ஆசிரியர்கள் மேலதிக சிரமத்துக்கு உள்ளாகிறார்கள். வகுப்பறையில் முறையான பாடபோதனை நடைபெற உரிய ஏற்பாடுகள் உபகரணங்கள் இல்லாத சூழ்நிலையில் ஆசிரியர்கள் சிரமப்படுகிறார்கள்.

இவ்வாறாக ஆசிரியர் பல துறைகளிலும் படும் கஷ்டங்களை கல்வித் திணைக்களத்தினர் அறியாமல் இல்லை. உணராமல் இல்லை. இருப்பினும் இவற்றுக்கும் மத்தியில் கல்விப் பணியைத் தொடர வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

மாணவர்கள் 6 மணித்தியாலங்கள் மட்டுமே பாடசாலையில் காணப்படுகிறார்கள். ஏனைய பதினெட்டு மணித்தியாலங்களும் அவர்களுக்குரிய செயற்பாடுகளைத் திட்டமிடும் பொறுப்பு பெற்றோரைச் சார்ந்தது.

அவர்களிடத்து சிரிய ஒழுக்க உணர்வுகளை உருவாக்கி அவர்கள் நல்ல பிரஜைகளாக மலர வீடு தனது பங்களிப்பைச் செய்ய வேண்டும் — இவ்வாறு தனது பேட்டியில் திரு. சுந்தரலிங்கம் கூறினார். திரு. சுந்தரலிங்கம் பல்துறை அனுபவம் உள்ளவர். சென்னை கிறிஸ்தவ கல்லூரி விஞ்ஞான பட்டதாரியாகவும், லண்

**இந்த வாரத்துப் பிரஜை**

டன் பல்கலைக்கழக கலையியல் பட்டதாரியாகவும் பாலபண்டிதராகவும் விளங்கும் இவர் இசை, நடனம் ஆகிய துறைகளிலும் பயின்று உள்ளார்.

1959 ஆம் ஆண்டு புசல்லாவ சரஸ்வதி வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகத் தனது அரசாங்க சேவையைத் தொடங்கிய இவர் பரீட்சைத் திணைக்கள உதவி அத்தியட்சகர் கல்வி வெளியீடுகளின் பிரதம ஆசிரியர், பிரதம கல்வி அதிகாரி என்று பல பதவிகளை இருபத்தியேழு ஆண்டுகள் வகித்து இன்று வடபிரதேச கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெறுகிறார்.

அவரது அனுபவம் தழுவிய முயற்சிகள் வட பிரதேச கல்வி உயர்ச்சிக்கு வழி செய்யட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - 5

இந்த ஏழு மாதங்களில் சிவனேசன் திலகத்தை ஐந்தாறு முறை சந்தித்து விட்டான்.

இப்பொழுதெல்லாம் திலகம் வெள்ளிக்கிழமை எப்போது வரும் என்று காத்திருக்கத் தொடங்கி விட்டாள். காலாதி காலம் காத்திருந்து, செய்த மோனத்தவத்தினால் இப்பொழுது தன் வாழ்வில் வசந்தம் வீச ஆரம்பித்துள்ளதோ என்று அவளுக்குள்ளேயே ஒரு பிரமை.

தானறியாமலே தன் மனம் சலனமுற்று சிவனேசன்பால் ஏன் செல்ல வேண்டும்? பாடசாலையிலும் சரி, அதை விட்டு விலகிய பின்னும் சரி இன்று வரை அவள் யாருக்கும் தன் மனதைப் பறி கொடுத்தவளல்ல. வீணான சபலங்களுக்கு ஆளாகியவளல்ல.

'திலகமோ! அது அடக்கமான ஒரு பிள்ளை. தலை நிமிர்ந்து கதைக்காது!'

பொதுவாக கிராமத்தில் நிலவிய அபிப்பிராயம். அயல் வீடுகளில் எல்லாம் திலகத்துக்கு நல்ல பெயர்.

கனகசபையின் இல்லம் ஒளிவிடுவதே திலகம் அங்கு இருப்பதனால்தான் காலை எழுந்தது முதல் இரவு படுக்கைக்குப் போகும் வரை திலகம் வீடு முழுவதும் பம்பரமாய் திரிவாள். ஒரு தூசு துப்பு காண விடாள். வீடு வாசல் எல்லாம் பளிச் என்று இருக்க வேண்டும் அவளுக்கு. எதிலும் ஒரு ஒழுங்கு! எங்கும் அழகு!

தன்னைச்சுற்றி ஒரு உலகத்தை உருவாக்கிக் கொண்டு நின்ற திலகத்துக்கு அடக்கம் மேலோங்கி நின்றபடியால் பிற உலக தாக்கம் அவளில் படிய மறுத்தது.

சரசு எல்லோருடனும் சரிசமமாக வார்த்தையாடுவாள். ஆனால் அதற்கு எதிர்மாறாக அமைந்திருந்தது திலகத்தின் போக்கு.

பாடசாலையில் சிவனேசன் திலகத்தை விரும்பி, அவளிடம் கையளித்த கடிதம், அதில் அடங்கி இருந்த வார்த்தைகள் யாவும் அவள் அடி மனதில் படிந்திருந்தது என்னவோ உண்மை தான்.

ஆனால் அவளை அவை ஒன்றும் செய்து விடவில்லை.

இப்பொழுது சிவனேசன் மறுபடி அவளது வாழ்வில் குறுக்கிட்டு விட்டான்.

'இப்பிடியே நெடுகலும் இருக்கப் போகிறீரோ--?' ஒரு நாள் இப்படிக் கேட்டான் சிவனேசன்.

ஒவ்வொரு சந்திப்பிலும் அவர்களது உரையாடல்கள் இலைமறைகாய் மறைவாக இருந்தாலும் அவை ஆழமுள்ளதாய் அமைந்தன.

வீட்டுக்குள் வந்து தன் அறையில் இருக்கும் போது மனதை பாரமாக்கின. சிவனேசனது கதைகளும் நினைவுகளும்.

சிவனேசன் முதலில் சந்தித்தபோது தான் இன்றும் தனி ஆள் தான் என்று சூசகமாய் தெரிவித்த லாவகத்தை நினைச்சு நினைச்சு தனக்குள்ளே சிரிப்பாள். மகிழ்வாள். அவளுக்கு அப்பதில் திருப்தியாய் இருந்தது.

தன் கல்யாணத்தைப் பற்றியே சிந்திக்காத தந்தையின் மேல் இவ்வளவு காலமும் ஏற்படாத கோபமெல்லாம் இப்பொழுதுதான் ஏற்பட்டன.

ஏதாவது செய்யவேண்டும். கட்டுப்பாடுகளை உடைத்தெறிய வேண்டும். தனக்கும் ஒரு வாழும் உரிமை உண்டு, அதை நிரூபிக்க வேண்டும் என்ற தாளாத வெறி உணர்வு ஒன்று இப்பொழுது திலகத்தை முற்றாக ஆக்கிரமித்துக் கொண்டது.

அடேயப்பா இவ்வளவு இலக்கிய அறிவா இவனுக்கு? திலகம் வியந்து போனாள். சிவனேசன் தன் இதய ஆசையை, திலகத்தின் மீது அவன் இன்றும் வைத்துள்ள மாறாத தன் மோகத்தை எண்ணற்ற கடிதங்களில் கொட்டித் தீர்த்து விட்டான். சாண்டில்யன் வர்ணனைகள் தோற்றுப் போனது கடிதங்களில்! கடிதங்களைக் கோயிலடியில் வைத்து யாருமறியாமல் அவன் கொடுப்பான்.

முதலில் கடிதத்தை வேண்டத் தயங்கினாள். அவன் வற்புறுத்தினான்.

"நீர் வேண்டாவிட்டால் விடும்! நான் போஸ்ட் பண்ணி விடுகிறேன்"

ஐயோ வேண்டாம்--!! திலகம் பதறினாள்.

என்ன குழந்தைப் பிள்ளை மாதிரி பயப்படுகிறீர்! இவ்வளவு வயது வந்த பின்னரும் தாய் தகப்பனுக்குப் பயந்து நிற்கிறீர்!

தாய் தகப்பனுக்குப் பயப்பட வயது இல்லை--- வீட்டிலை கடிதம் வந்தால்---வேணும்!'

'சரி நான் அனுப்பவில்லை. இதைப் பிடியும்!'

திலகம் வீட்டிலிருக்கும் போது இவைகளை எண்ணிச் சிரித்துக் கொள்வாள்.

ஆண்டாண்டு காலம் வரட்சியால் வெடித்து

# சிறைப் பறவைகள்

து. வைத்திலிங்கம்



பாளங்களாக இருந்த நிலம், குளிர்ந்து பெய்த பெருமழையை தன்னுள் முழுமையாக ஏற்றுக் கொண்டது. பசுமை துளிர் விட்டது.

மீண்டும் யௌவனம் துளிர்விட ஆரம்பித்தது. மகிழ்ச்சியின் எல்லைக் கோடுகள் நீண்டன.

ஆனாலும் திலகம் அடக்கத்தின் வரம்பை மீறவில்லை. தன் நெஞ்சத்து ஆசைகளை எழுத்தில் வடித்தாள்.

தன்னை எங்கே மறுபடி நிராகரித்து விடுவாளோ என்று பயந்திருந்த சிவனேசன் அகமகிழ்ந்தான்

ஆனால் பூனைக்கு யார் மணிகட்டுவது? இதுதான் பிரச்சினையாய் விசுவரூபம் எடுத்தது.

சிவனேசன் வீட்டுக்கு ஒரே பிள்ளை. காசிலிங்க ஆசிரியர் மிகவும் முற்போக்குச்சிந்தனைகள் உள்ளவர். தனது மகன் திருமணமே வேண்டாமென்று இருந்தவன் மீண்டும் திருமணம் என்று பேச்சுக்கால்கள் பல இடங்களில் இருந்து இப்

பொழுது வர ஆரம்பித்ததும் முன்பு போல் சிறிவிழவில்லை என்பதைப் புரிந்து கொண்டார்.

'அம்மா கொஞ்சநாள் பொறுங்கோ, நான் சொல்லுறன்' சிரித்தபடி தாயிடம் கூறினான் ஒரு நாள்.

'கொஞ்சநாள் என்றால்? நீ எங்கையாவது நினைச்சு வைச்சிருக்கிறியோ? அதை யெண்டாலும் சொல்லன் தம்பி!'

சிவனேசன் சிறிது நேரம் மௌனம் சாதித்தான்.

'அம்மா, எல்லாம் நீங்கள் சந்தோஷப்படுகிற மாதிரிநடக்கும்! கொஞ்சநாள் பொறுத்துக் கொள்ளுங்கோ!' தாய்க்கு சந்தோஷம் தான்.

'அரைக்கிழவன் வயதாகப் போகிறது. வாற கலியாணங்களை எல்லாம் தட்டிக் கழிக்கிறான்!. இனி எங்கை இவனுக்கு நான்கலியாணம்பேச--?'

அவள் பாடும் பல்லவி சிறிது நாள் ஓய்ந்திருந்தது.

காசிலிங்க ஆசிரியர் தன் மனைவி சிவனேசனின் உள்ளக்கிடக்கையை எடுத்துக் கூறியதும் சிந்தனைவயப்பட்டார்.

சரி அவனுடைய ஆசை தான் எங்களுடைய ஆசையும். ஆனால் நாங்கள் முதலில் போய் அவர்களிடம் கேட்பது அழகில்லை. அது சிவனேசனுக்கு இளக்காரமாகிவிடும்!

அவர் தட்டிக் கழித்தார்.

"அவன் இவ்வளவு காலமும் கலியாணம் எண்டாலே பேய் பிசாசு மாதிரி பாஞ்சவன் இண்டைக்கு ஒரு வழிக்கு வந்திருக்கிறான். ஆறப் போடாமல் நடக்கிற வழியைப் பாருங்கோ'

'கொஞ்சம் பொறுமையாய் இரும்! நான் இரண்டு நாளாய் இதைப் பற்றித்தான் யோசிக்கிறன். உமக்குத் தெரியுமோ என்னவோ, பெட்டையின்ரை தகப்பன் கனகசபை ஒரு சாதி ஆள்! மற்ற ஆட்களை இலேசிலை மதிக்கமாட்டார்.

பழைய சம்பவம் ஒன்று அவருக்கு ஞாபகம் வந்தது. ஒருமுறை பெருமழை பெய்து கிராமத்து அரைவாசிப் பகுதி நீரில் மூழ்கி விட்டது. வெள்ள வாய்க்கால் துப்புரவாக்கும் செலவை ஈடுகட்ட கிராமம் முழுவதும் திரிந்து பணம் சேர்த்தனர். கிராமமுன்னேற்றச் சங்க அங்கத்தவர்களும் தொண்டர்களும் வீடு வீடாகச் சென்று பணம் சேர்த்தனர். காசிலிங்கமும் உடன் சென்றிருந்தார்.

கனகசபை வீட்டுக்கும் வந்தனர். வந்த நோக்கத்தைக் கூறினர்.

எல்லாவற்றையும் ஆறுதலாகக் கேட்டார் கனகசபை.

'வாய்க்கால் திருத்திற வேலை அரசாங்கம் செய்யும்தானே! நீங்கள் ஏன் தலையிடுகிறீர்கள்? வேணுமெண்டால் சொல்லுங்கோ, எங்கடை பகுதி டி.ஆரோ எனக்குத் தெரிஞ்ச மனுசன்தான் நான் சிபார்சு செய்து விடுகிறன்!'

'எங்களுக்கும் டி.ஆரோவைத் தெரியும்! நீங்கள் இப்ப உங்களுடைய பங்களிப்பைச் செய்யுங்கோ' வந்த தொண்டர்களில் இளம் [illegible] ஒருவன் காரமாகக் கூறினான்.

'இப்ப சரியான கஷ்டம் பாருங்கோ; எந்தைக் கொண்டு நாங்கள் கொடுக்கிறது?'

முணுமுணுத்துக் கொண்டு இரண்டு ரூபாய் தாளை எடுத்து நீட்டினார்.

வந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அந்த இரண்டு ரூபாய் தாளைப் பெற்றுக் கொண்டு அவருடைய பெயரை எழுதிக் கொண்டு வெளியே வந்தனர்.

'கணக்கு வழக்கெல்லாம் சரியாய் எழுதிவையுங்கோ! ஊர்க்காசு கவனமாய் இருக்கவேணும்!' கனகசபையின் வார்த்தைகள் காற்றில் கலந்தன.

'மாஸ்டர் நான் வரும் போதே சொன்னனான் இவரிட்டை போய் மினக்கிடவேணுமென்று!பார்த்தீங்களே.........' அந்த இளவயதுக்காரன் கூறினான்.

'தம்பி பொறுமையைக் கடைப்பிடியும்! இது பொது விஷயம் அவர்கள் மனமுவந்து தருவதைப் பெற்றுக் கொள்ள வேண்டும்!' விஷயம் அத்துடன் முடிந்தது.

ஆனால் வாய்க்கால் துப்புரவு வேலைகள் நடக்கும்போது கனகசபையின் மகன் சந்திரன் வந்து ஐம்பது ரூபாய் தாளை காசிலிங்க ஆசிரியரிடம் கொடுத்து இதைச் செலவுக்கு எடுங்கோ மாஸ்டர் என்று கூறினான்.

காசிலிங்க ஆசிரியர் சுற்றிநின்ற ஆட்களை அர்த்தமுடன் பார்த்துக் கொண்டார்.

ஆனால் கனகசபை வீட்டில் காசு ஐம்பது ரூபாவைக் காணவில்லை என்று ரகளை செய்து வீட்டை இரண்டாக்கிய சங்கதி அவர்களுக்கு தெரிய நியாயமிருக்கவில்லை.

'கனகசபை ஆட்களை எனக்கு நல்லாய் தெரியுமப்பா. தகப்பன் பணக்கார இரத்தினம் என்று அந்தக் காலத்திலை நல்ல செல்வாக்கோடு இருந்தவர். இந்த மனுசன் ஒரு கிறுக்குப் பிடிச்ச ஆள்! மற்றவை ஒருவரையும் மதிக்கமாட்டான்! அது தான் எனக்கு யோசனையாய் இருக்கிறது.

'எனக்குப் பெட்டையின்ரை தாயைத் தெரியும். நல்ல மனுசி. கோயிலுக்கு வந்துபோற வேளையிலை கண்டிருக்கிறன். இனி பெட்டையும் நல்ல வடிவு. நல்ல சிவப்பு நிறம். தம்பியின்ரை உயரத்துக்கும் நிறத்துக்கும் நல்ல பொருத்தம்! நாங்கள் கோயில் மணியத்தின்ரை மாமியார் கற்பகத்திட்டை சொல்லிக் கேட்டுப் பார்ப்போம்! மனுசி அவையோடு நல்ல வாரப்பாடு'

'நீர் என்னவோ அவசரப்படுகிறமாதிரி தெரியுது எனக்கு. சரி கிழவியிட்டை விஷயத்தைச் சொல்லிகேட்டுப்பாரும்' காசிலிங்கம் மனைவியிடம் சம்மதம்தெரிவித்தாலும் அவருக்கு என்னவோ நம்பிக்கை எழவில்லை.

'பூரணம்! எடி பிள்ளை பூரணம்...' நீட்டி முழக்கி அழைத்துக் கொண்டே கற்பகம் வீட்டுக் கேற்றைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள்.

'வாருங்கோ' பூரணம் கிழவியைக் கண்டு விட்டு வெளியே வந்தாள்.

'இஞ்சை பாரன் திலகம் நல்ல [illegible]கன்று ஒன்றை நட்டு வைச்சிருக்கிறாள்! சுப்பிரமணியம் பார்க்குக்குப் போன மாதிரிக் கிடக்கு! எடி பிள்ளை திலகம் எனக்கும் இரண்டு தடி வெட்டித் தாவனடி ஆத்தை!'

சுற்றுப் புறமெல்லாம் ஒரே சீராக நடப்பட்டிருந்த குரோட்டன் செடிகளும் நல்லின ரோசாச் செடிகளும் கண்களைப் பறித்தன.

பூரணமும் கற்பகமும் நெடுநேரம் கதைத்தனர்.

'பெடியன் விரும்பி வாறான். திலகத்துக்கும் நல்ல விருப்பம் போலை கிடக்கு! இந்தக் காலப் பிள்ளையளின்ரை விஷயங்கள் லேசிலை விளங்காது பூரணம். உன்னுடைய மனுசனிட்டைச்சொல்லி கெதியிலை முடிக்கப்பார்'

'நீங்கள் சொல்லிப் போட்டியள். இனி அவரோடை கதைச்சல்லோ மிச்சம்'

பூரணம் அவநம்பிக்கை தொனிக்கக் கூறினாள்.

'ஏன் இதைச் செய்யக் கசக்குதோ அவருக்கு? அப்ப பெட்டையை நெடுகலும் இப்பிடியே வைச்சிருக்கச் சொல்லு! என்னுடைய வாயிலை வரும் இப்ப... அங்காலை அவள் பெட்டை நிற்கிறாள்...ஓ!'

'அது சரியக்கா, பெடியன்ரை உத்தியோகம் என்ன மாதிரி?'

'ஏன் அவனுடைய உத்தியோகத்துக்கு என்ன குறை? அப்போதிக்கரி வேலை. நல்ல கை நிறைய சம்பளம்.

இனி அங்காலைப் பக்கம் இவன்களுக்கு நல்ல வருமானம்! எங்கடை சனம் மாதிரியோ அதுகள் வைத்தியம் செய்வித்தால் என்னவெண்டாலும் குடுக்காமல் போகாதுகள்!'

'அது சரியக்கா, இப்ப பெடியன் வேலையை விட்டிட்டு வந்து நிற்கிறானே? நெடுகலும் கோயிலடியிலைதான் நிற்கிறான்!

'இஞ்சை பூரணம் விசர்க்கதைகதையாதை. அனுராதபுரப் பக்கம் இப்ப கலவரமெண்டு வந்தவன். இப்ப அங்கை போக ஏலாது. தான் இனிப் போகமாட்டன் எண்டு சொல்லிப்போட்டான். தகப்பனும் ஓ இனி நீ அங்கை போகாதை. இஞ்சை தோட்டம் கொத்தினாலும் மரியாதையாய்ப் பிழைக்கலாம் எண்டு சொல்லிப் போட்டாராம்!

பெடியனுக்கு வெளிநாட்டுக்குப் போற எண்ணமும் கிடக்குப் போலை தெரியுது. தாய்க்காறி சாடையாய் சொன்னவள். பேசாமல் சட்டுப் புட்டென்று ஒழுங்குகளைப் பாருங்கோ! உன்ரை மகளுக்கும் நல்லபலன் இருந்தால் போகட்டுமன் புருஷனோடை வெளிநாட்டுக்கு!'

கிழவிக்கு மூச்சிரைத்தது.

பூரணம் நல்ல மனநிறைவோடு இருந்தாள்.

இதற்குள் திலகம் எவர்சில்வர்பேணியில் கோப்பி கொண்டு வந்து கொடுத்தாள்.

கிழவி மிடறு மிடறாய் ரசித்துக் குடித்தாள்.

'உங்கடை மாட்டுப் பாலே! கோப்பி நல்லாயிருக்குதடி மோனை! இஞ்சை திலகம், இரண்டு ரோசாத்தடி வெட்டித்தா பிள்ளை'

திலகம் உள்ளேசென்று கத்தியை எடுத்து வந்து நல்லதாய் நாலு தடி வெட்டிக் கொடுத்தாள்.

'அந்த மரத்திலை ஒரு சின்னக் கொப்பு வெட்டினாலும் சத்தம் போடுவாள். இண்டைக்கு மனம் வந்து ஒன்றுக்கு நாலு தடி வெட்டித் தந்திருக்கிறாள்!'

பூரணம் கற்பகத்தைப் பார்த்துக் கூறினாள்.

திலகத்தின் உள்ளம் அன்றலர்ந்த ரோசா மலரென மலர்ந்திருந்தது.

பூரணத்தின் மனம் சந்தோஷத்தால் நிறைந்திருந்தது.

கிராமத்தில் திலகத்தின் ஒத்த வயதுடைய பெண்கள் பலர் திருமணமாகிக் குழந்தைகளுடன் வாழ, தன் மகளுக்கும் இப்படி ஒரு சந்தோஷமான வாழ்வு விரைவில் வராதா எனப் பல நாள் ஏங்கியதுண்டு. ஏதோ இப்போதாவது இறைவன் ஒரு வழியை வகுத்து விட்டானே என சந்தோஷப்பட்டாள்.

'நீ படிக்கிறபொழுது காசிலிங்க மாஸ்ரரின்ரை மகனும் உன்னோடை படிச்சவனே'

சமையல் நடந்து கொண்டிருந்தது.

பூரணம் மகளைப் பார்த்துக் கேட்டாள்.

'ஓ! அவர் என்னுடைய வகுப்புத்தானே...' முழுமையான பதில் ஒன்றைச் சொல்ல திலகத்தை சந்தோஷம் கலந்தவொரு நாணம் தடுத்தது.

'கற்பகக்கா சொல்லிப் போட்டுப் போறா... இனி சீதன பாதனம் என்ன மாதிரிக் கேட்பினமோ தெரியாது...'

தனக்குள் சொல்வது போலிருந்தாலும் அது திலகத்துக்கும் கேட்கும் எனப் பூரணத்துக்குத் தெரியும்.

திலகம் ஒன்றும் பேசவில்லை.

'உம்முடைய அப்பாவின் பணம் எனக்குத் தேவையில்லை... நான் மனதார விரும்பும் திலகம் தான் எனக்குப் பெருநிதி...' சிவனேசனின் ஒரு கடிதத்து வாசகங்களை அவள் தன் மனதில் மீண்டும் அசை போடுகிறாள்.

'உதென்ன கீரைக்கு இரண்டாவது தரம் உப்புப் போடுகிறாய்?'

பூரணம் கேட்டாள்.

'ஏன் நீங்களும் போட்டனீங்களே...? நான் கவனிக்கவில்லை...?'

திலகம் நெளிந்தாள்.

'எல்லாம் ஒழுங்காய் செய்யிற உனக்கு இண்டைக்கு என்ன வந்தது?' பூரணம் எழுந்து வந்தாள்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## இரு மாத குறுநாவல்

## திறமைமிக்க மாணவர்களை பள்ளியில் சேர்க்காத அதிசய அதிபர்

பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்க்கும் போது படிப்பில் திறமையானவர்களையும், ஒழுக்கத்திற் சிறந்தவர்களையும் மட்டுமே அதிபர்கள் தெரிவு செய்வது சகஜம்.

ஆனால் இந்த நடைமுறைக்கு மாறாக புதுமையாக சிந்தித்து எம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்திய அதிபர் ஒருவர் இருந்தார். அவர் தான் காலஞ்சென்ற கலாநிதி சிவப்பிரகாசம்.

அவர் யாழ்ப்பாணத்தில் ஒரு பாடசாலையில் அதிபராக இருந்தபோது புதிய மாணவர்களை அனுமதிக்கும் பிரச்சினை எழும். பெற்றோர் தமது பிள்ளைகளின் பெறுபேறுகளை எடுத்து விளக்குவர். எனது மகன் கணிதத்தில் 90, விஞ்ஞானத்தில் 85, ஆங்கிலத்தில் 75 என்று நல்ல புள்ளிகளைப் பெற்றிருக்கிறான். எனவே உங்கள் பாடசாலையில் அனுமதியுங்கள் என்று தமது வேண்டுகோளுக்குச் சாத

தேன்கூடு

கமாக வாதங்களை அடுக்கிக் கொண்டு போவார்கள். இதை நிரூபிக்க பெறுபேற்று அறிக்கைகளைச் சமர்ப்பிப்பார்கள்.

இவற்றை அமைதியாகச் செவிசாய்த்து விட்டு கலாநிதி சிவப்பிரகாசம் பின்வருமாறு கூறுவார்-:

இவ்வாறு படிப்பில் திறமை உள்ள மாணவர்களை அனுமதிக்கப் பல பிரபல பாடசாலைகள் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றன. அந்த அடிப்படையில் தான் அங்குள்ள அதிபர்கள் மாணவர்களை அனுமதிப்பார்கள்.

அதன் மூலம் பொதுப் பரீட்சைகளில் நல்ல

- சுந்தரனார் -

பெறுபேறுகளைப் பெறலாம். பாடசாலையின் கீர்த்தி ஓங்கும். கல்வித் திணைக்களத்தின் பாராட்டைப் பெறலாம். இவ்வாறு இந்த அதிபர்கள நம்புகிறார்கள். எனவே திறமை மிகுந்த உங்கள் மகனை அங்கு கொண்டு செல்லுங்கள்.

எனது அணுகுமுறையோ வேறு திறமையான மாணவர்களை அனுமதித்து பாடபோதனை நடத்தி நல்ல பெறுபேறுகளைப் பெறுவது மட்டும் தான் கல்வி என்று நான் சிந்திப்பதில்லை.

படிப்பில் குறைந்த சாதாரண மாணவர்கள் எண்ணிக்கை சமூகத்தில் அதிகம். அவர்களை எப்படிப் படிக்க வைப்பது என்று பெற்றோர்கள் திணறிக் கொண்டிருக்கிறார்கள். கட்டுப்பாடுகளை மீறும் இயல்புள்ள பிள்ளைகள் அநேகம். இவர்களை நல்வழிப்படுத்துவது எப்படி என்று பெற்றோர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

இப்படியான சூழலிலே பாடசாலை அதிபர்கள் இவ்வாறு நடக்கலாமா?

பாடபோதனை, கல்வித் தத்துவம், குழந்தைகள் உளவியல், கல்வி உளவியல் இப்படிப் பல துறைகளிலே அறிவு பெற்றவர்கள் ஆசிரியர்கள். இத்துறையிலே முறையான பயிற்சியும் பெற்றவர்கள் அவர்கள். இதைவிடத் தமது தொழிலில் உரிய அனுபவமும் பெற்று இருக்கிறார்கள்.

விளையாட்டு, செய்முறை என்று பல கல்வி முயற்சிகளுக்குப் பாடசாலைகளில் வசதிகளும், உபகரணங்களும் உண்டு. அரசாங்க நிதியுதவியுடன் சமூகத்தின் பங்களிப்பும் கிடைக்கிறது.

இந்த நிலையில் பாடசாலைகள் தமது கடமையில் இருந்து நழுவி விடலாமா? எனவே தான் நான் புதுமுறையில் மாணவர்களை அனுமதிக்கிறேன்.

படிப்பில் குறைவானவர்கள், கட்டுப்பாடுகளை மீறும் இயல்புள்ளவர்கள், இப்படியான சாதாரணர்களுக்கு எனது பாடசாலையில் அனுமதி வழங்குவது எனது கொள்கை — இவ்வாறு அவர் கூறுவார்.

பலாலி ஆசிரிய கலாசாலையில் அவர் சிரேஷ்ட விரிவுரையாளராக இருந்த காலத்திலே இக்கருத்துக்களை, அவர் தனக்கே உரிய நடையிலே சொல்லக் கேட்டவர்கள் வியந்து போவதுண்டு.

படிப்பிலும் சாதாரணர்களின் நலனைக் கருதும் சமுதாயப் பார்வையை அமரர் கலாநிதி சிவப்பிரகாசத்திடம் கண்டோம்.

# சிறுவர் கதைகளில் குறிக்கோள் மாற்றம்

இலக்கியம் காலத்தின் கண்ணாடி. அது குறித்த ஒரு சமூகத்தின் பண்பாட்டைக் காட்டும் கண்ணாடியுமாகும். இலக்கியம் என்ற சொல் இலட்சியத்தோடு தொடர்புள்ளது என்று கூறுவோரும் உளர். இலட்சிய சமூகத்தைக் காட்டுவதே இலக்கியம் என்பது இவர்களது கருத்து.

சிறுவர் இலக்கியம் இலக்கியத்தின் கூறாக அமைவதே ஆயினும் அதன் பண்பும் பயனும் வேறானது. சிறுவர்களது வயதுக்கும் அறிவுக்கும் கற்பனைக்கும் சொற்பரப்புக்கும் ஏற்றதாகச் சிறுவர் இலக்கியம் அமைய வேண்டும். இவற்றினூடாக மாணவருக்கு அறிவு ஊட்டப்பட வேண்டும். ஒழுக்கவியற் கோட்பாடுகளும் சிறுவர் இலக்கியங்களூடாகவே ஊட்டப்பட வேண்டும்.

"நி. ராத்லொவ்" என்பவர் சோவியத் நாட்டின் புகழ்பெற்ற சிறுவர் இலக்கியஆசிரியர். இவர் "சித்திரக் கதைகள்" என்ற சித்திரக் கதை நூலை வெளியிட்டுள்ளார். பூ. சோமசுந்தரத்தின் தமிழாக்கத்தில் இது மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகத்தால் (1977ல்) வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலில் "பிடிவாதமுள்ள ஆடுகள்" என்ற சித்திரக் கதை இடம் பெற்றுள்ளது. இக்கதை மூன்று ஓவியங்களால் சித்திரிக்கப்பட்டுள்ளது. முதலாவது படத்தில், இரண்டு தாடியுள்ள ஆடுகள் எதிர்த் திசைகளில், ஆற்றின் மேலுள்ள மிக ஒடுங்கிய பாலத்தில் வரும் காட்சியுள்ளது. அடுத்த படத்தில் ஆடுகள் இடிபடும் காட்சி. அதன் கீழ், 'ஆற்றுப் பாலத்தின் மேல் இரண்டு ஆடுகள் முட்டிக் கொண்டன', என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது படம் ஆடுகள் இரண்டும் ஆற்றுக்குள் வீழ்வதையும் மீன்கள் அவற்றை வாயைத் திறந்து ஆவலோடு பார்ப்பதையும் காட்டுகிறது. 'வீண்பிடிவாதமுள்ளவர்கள் அழிவார்கள்' என்ற தத்துவத்தை இது விளக்குகிறது. சில வேளை ரஷ்ய நாட்டுப் பண்பாட்டின் அடிப்படையில் இதனூடாக வேறு தத்துவம் கூட விளக்கப்படலாம்.

இலங்கைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள "தமிழ் வாசகம் - ஆண்டு -1" என்ற நூலில் (1985) 'படம்

மயிலங்கூடலூர்
**பி. நடராசன்**

பார்த்துக் கதை சொல்லுங்கள்' என்ற தலைப்புடன் இரு சித்திரக் கதைகள் இடம்பெற்றுள்ளன. இ. முருகையன் அவர்களைத் தலைவராகக் கொண்டநூலாக்கக் குழு இது போன்ற ஒரு கதையைச் (பக்கம்6) சித்திரக் கதையாகச் சேர்ந்துள்ளது. இக்கதை உண்மையில் மேற்குறிப்பிட்ட கதையின் திருந்திய வடிவமே.

இச் சித்திரக் கதையில் நான்கு படங்கள் இடம் பெற்றுள்ளன. முதலாவது படத்தில் இரண்டு ஆடுகள் ஒன்றையொன்று நோக்கி எதிர்த் திசைகளிலிருந்து வருகின்றன. இரண்டாவது படத்தில் ஆடுகள் இடிபடுகின்றன. மூன்றாவது படத்தில் கறுப்பு ஆடு பாலத்தில் படுத்துக் கொள்ள வெள்ளை ஆடு அதன் மேலாகப் பாலத்தைக் கடந்து செல்கிறது. நான்காவது படத்தில் ஆடுகள் மகிழ்ச்சியோடு தமது வழியில் தொடர்ந்து செல்கின்றன.

இக்கதை ஒற்றுமை, விட்டுக் கொடுத்தல், இசைவாக்கம், எல்லோரும் இன்புற்று வாழ்தல் முதலிய பண்புகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புற நானூற்றுப் புலவரின் குரல் இங்கு ஒலிப்பதைக் கேட்கலாம்.

வால்மீகிராமாயணத்திலிருந்து தோன்றிய கம்பராமாயணம், துளசிராமாயணம் முதலியவை ஒருவகையிலே பிரதேசப் பண்பாடுகளைப் பிரதிபலிப்பது போல இக்கதைகளும் இருவேறு பண்பாடுகளைப் பிரதிபலிப்பதாகக் கொள்ளலாமன்றோ?

எல்லோருக்கும் 'காகமும் வடையும்' என்ற கதை தெரியும். காகம் வாயைத் திறந்து பாடி வடையை இழந்தது பழைய கதை. புத்தியுள்ள காகம் வடையைக் காலுக்கடியில் வைத்துக் கொண்டு பாடி நரியை ஏமாற்றியது ஒரு புதுக் கதை. காகம் வடையை நரியின் தலையில் போட நரியின் மண்டை உடைந்ததாக ஒரு புத்தகம் புதுக்கதை. (வடை சுடுவோரைக் கேலி செய்ய எழுந்தது)

பிரதேசத்துக்குப் பிரதேசம் என்ற அடிப்படையில் மட்டுமன்றி ஒரு பிரதேசத்தில் ஒன்றாக வாழும் அறிஞரிடையே கூடச் சிறுவர் இலக்கியச் சிந்தனைகள் மாறுபடுகின்றன என்பதையே இவை புலப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளபளக்கும் எழில் கொஞ்ச அழகான கூந்தல் வேண்டுமா?

இயற்கையில் கேசம் மனிதருக்கு ஒரு கிரீடமாக அமைந்திருக்கிறது.

ஒருவரின் அழகுக்கும், இளமைக்கும் வசீகரத்துக்கும் இது ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது.

குறிப்பாக அழகிய கூந்தல் பெண்களுக்கு தனிக் கவர்ச்சியைக் கொடுக்கிறது.

இலக்கியங்களிலும் கவிதைகளிலும் கூந்தலைப் பற்றிய வர்ணனைகள் நிறையவே உண்டு.

கார்குழல் என்றும், வண்டமர் பூங்குழல் என்றும் வண்ணத் தோகை என்றும் அந்த வர்ணனைகள் விரிந்து செல்லும்.

பைபிள் கூட இந்தக் கூந்தலை விடவில்லை.' But if a woman have a long hair, it is a Glory to her' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பெண் ஒருத்திக்கு நீண்ட அழகிய கூந்தல் இருக்குமானால் இது அவளுக்கோர் மகத்துவமாகும் என்கிறது அந்த பைபிள் வாசகம்.

ஆரோக்கியமான அடர்ந்த நீண்ட பளபளப்பான கூந்தலைப் பெற எல்லாப் பெண்களுக்குமே விருப்பம் இருக்கவே செய்யும்.

நல்ல கூந்தலைப் பெற பலவித எண்ணெய் தடவிப் பக்குவங்கள் பல செய்து பார்த்தும் எதிர்பார்க்கின்ற பயன்கள் அதிக அளவுக்குக் கிடைப்பதில்லை.

மயிர் உதிர்ந்து போதல், அடர்த்தியின்றி ஐதாக இருத்தல், குறுகிக் கூழையாக இருத்தல் போன்ற காரணங்கள் பெண்களின் கவர்ச்சியைக் கெடுத்து விடுகிறது.

## இதோ சில வழிகள்

இது பல பெண்களுக்கு பெரிய மனப் பாதிப்பை உண்டு பண்ணியும் விடுகிறது.

இந்தப் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள சில வழி முறைகள் இருக்கின்றன.

பொதுவான தேக ஆரோக்கியத்துக்கு வேண்டிய உயிர்ச்சத்துகள் உள்ள சம உணவே கூந்தல் வளர்ச்சிக்குப் போதுமானதாகும்.

கேசம் வளமாகவும் பளபளப்பாகவும் இருக்க இரும்புச்சத்தும் கொழுப்புச் சத்தும் காரணமாகும்.

இந்த உயிர்ச்சத்துக்களைப் போதிய அளவு பெறுவதற்கு முருங்கைக் கீரை, அகத்திக்கீரை, புளிச்சக்கீரை, கறிவேப்பிலை போன்ற கீரை வகைகளையும் இறைச்சி, மீன், முட்டை, பால், நெய் மற்றும் பருப்பு வகைகளையும் காய்கறி, பழவகைகளையும் உணவில் அதிகம் சேர்த்துக் கொள்வது பயனுள்ளதாகும்.

கீரை வகைகளையும் பாலையும் தினசரி தவறாது உணவிற் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பேரீச்சம்பழம், உலர்ந்த திராட்சைப் பழம் போன்றவற்றையும் அவ்வப்போது உண்டு வரலாம்.

கூந்தல் ஒப்பனைகளுக்காக அல்லது குடுமி முடிக்க தலையை வாரும் பொழுது கூந்தலை நன்றாகப் பிரித்து பரவவிட்டு விரல் நுனிகளால் நன்கு அழுத்தி ஒரே சீராக தேய்த்து விடுதல் நன்று 2 நிமிடங்கள் வரை இப்படி செய்தல் வேண்டும்.

தலை வாரும் பொழுது இவ்வாறு அழுத்தி 'மசாஜ்' செய்வதன் மூலம் போதிய இரத்த ஓட்டம் தலைக்கு கிடைக்க ஏதுவாகிறது. இதனால் கேசம் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் வளர வாய்ப்புண்டாகிறது.

வாரம் இருமுறை அழுக்குப்போககேசத்தை நன்றாக சுத்தப்படுத்த வேண்டும்

இதற்கு விலை உயர்ந்த ஷம்பூ, சவர்க்காரம் போன்றவற்றைத்தான் உபயோகிக்க வேண்டுமென்றில்லை.

சீயாக்காய் தேய்த்து முழுகுதலே போதுமானது. சீயாக்காயுடன் போதுமான அளவு பச்சரிசியையும், வெந்தயத்தையும் கலந்து அரைத்து இக் கலவையை கஞ்சியுடன் கலந்து தலைக்குத் தேய்த்து முழுகலாம். சீயாக்காய் அதிக அளவு சேரக் கூடாது.

ஈரத்துடன் சேர்த்து கூந்தல் சிக்கினை எடுக்கக் கூடாது. விரல்களால் கூந்தலைப்பிரித்துப்பிரித்து காற்றில் உலர விட்டுக் கொண்டே சிக்கலை மெல்ல எடுக்கலாம். இதனால் சிக்கல் இலகுவாக எடுபடுவதுடன் கேசம் உதிர்வதையும் தடுக்கலாம்.

சீப்பினால் சிக்கலை முற்றாக எடுத்தபின் கூந்தல் நுனியை ஒரு றிபனால் சேர்த்துக் கட்டி விட வேண்டும்.

இவ்வாறு றிபன் கட்டுவதனால் கூந்தலில் சிக்கல் ஏற்படாதிருப்பதுடன் கேசம் ஒன்றோடொன்று பின்னுமலும் இருக்க முடிகிறது. இதனால் எந்த இடையூறுமின்றி கூந்தல் நீண்டு வளர ஏதுவாகிறது.

கூந்தல் விரைவாக உலர வேண்டும் என்பதற்காகவும் பளபளப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் எலுமிச்சை, தக்காளி, மலிவான ஷாம்பூக்கள் மற்றும் போலி மூலிகைகள் கலந்த எண்ணெய் வகைகளை சிலர் அவசரப்பட்டு உபயோகிக்கிறார்கள்.

இப்பழக்கம் மிகவும் அபாயகரமானது என்பதை கேச வளர்ச்சியில் கருத்துக் கொண்ட நங்கையர் தெரிந்து கொள்வது நலம்.






### யானை

ஆடி ஆடி வா, வா
யானையே நீ வா, வா
அசைந்து அசைந்து வா, வா
யானையே நீ வா, வா
தின்னக் கித்துல், தென்னை
திங்கரும்பும் தருவேன்
வேறு என்ன வேண்டும்
சொல்லு தெய்வ யானை.

தம்பி

### தெரிந்து கொள்ளுங்கள்

- முதன் முதல் உப்புக்கு வரிவிதித்தவர்கள் - சீனர்.
- ஐக்கிய நாடுகள் சபை 1945 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பபட்டது.
- வங்கிக் காசோலை பிரிட்டிஸாரால் 1898ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- மனிதனில் மிகச் சிறிய எலும்பு காதிலுள்ளது.
- மலைப்பாம்புகள் கூடுதலாக ஆசியக்காடுகளிலேயே உள்ளன.
- மிகக் கூடிய ஒளி படைத்த நட்சத்திரம் சிரியஸ்.
- சுமாத்திராவில் 95 எரிமலைகள் உள்ளன. உலகின் மிகக் கூடிய எரிமலைகள் ஐஸ்லாந்தில் உள்ளன.

தி. தவபாலன்
யாழ் மத்திய கல்லூரி

### ஆகாயக் கப்பல்

விண் வெளியின் மீதிலே
விரைந்து கொண்டு செல்லுமாம்
கண் இமைக்கும் நேரத்தில்
கடுகதி யாய்ச் செல்லுமாம்

வெளி நாட்டுக்குப் போகவே
வெளிக்கிட்டு நாம் போகிறோம்
களி பேருவகை கொண்டுமே
காற்றாய்ப் பறந்து போகிறோம்

தம்பிப் பயலும் பார்க்கவே
தத்தித் தத்திப் போகிறான்
தும்பி போலப் பறக்குதே
தூரத்திலே அது என்றான்

ஏறிப் பறக்க வேண்டுமே
என்றான் தம்பி ஆசையாய்
சிறிச் சினந்த தம்பியும்
சிரித்து நின்றான் 'கொல்' லென்று.

- "ஸ்ரீ" -

## போகாமல் வந்தேனே

ஒரு ஊரில் குடியானவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் ஒருவருக்கும் ஒன்றும் கொடாத உலோபி. தனக்கும் தன் மனையாளுக்கும் நிறையத் தேடித் தேடுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தான்.

அவனுக்கு நெல்வயல்கள் பல சொந்தமாயிருந்தன. அதன் விளைச்சலை விற்றுப் பணமாக்கி நிறைந்த செல்வந்தனாக வாழ்ந்து வரலாயினான்.

ஒரு நாள் வழிப்போக்கன் ஒருவன் அவனது வீட்டுக்குச் சென்று 'ஐயா! குடியானவரே! எனக்குக் களையாக இருக்

- இ. ஸ்ரீதரன் -

கின்றது. பசிக்கு ஏதேனும் புசிக்கத் தாரும். அத்துடன் வழிச் செலவுக்குச் சிறிது பணமும் தந்து உதவ வேண்டும்' என்று கேட்டான்.

அவனோ கருமி. எப்படி ஒருப்படுவான். எதுவும் கொடுக்க மனமில்லாதவனாய் அவனைத் தட்டிக் கழிக்க எண்ணினான்.

உடனே அக்குடியானவன் அந்த வழிப்போக்கனைப் பார்த்து, 'இப்பொழுது வசதியில்லை. நீ போய் விட்டுச் சற்று நேரங்கழித்து வா' என்று சொல்லியனுப்பினான்.

அது கேட்ட அவனும் 'சரி' என்று கூறிவிட்டு வழி நடந்த களைப்புப் போவதற்காக வீட்டுத் திண்ணையில் படுத்துக் கொண்டான்.

வழிப்போக்கன் வெளியே படுத்திருப்பது அந்தக் குடியானவனுக்குத் தெரியாது. அவன் தன் மனைவியிடம் சென்று 'அடியே! ரஞ்சிதம், ஒருவன் உணவும் பணமும் கேட்டு வந்திருந்தான். நான் அவனைக் கால தாமதமாக வரும்படி அனுப்பி விட்டேன்' என்றான்.

'அதற்கு நாம் என்ன செய்யலாம்?' என்றாள் மனைவி. குடியானவனோ, 'நான் உன்னை அடிப்பது போல் ஏசியும் பேசியும் சுவரில் அடிக்கிறேன். நீயோ வலி தாங்கமாட்டாமல் அழுவதைப் போல் உரத்த குரலில் கத்தி அழு. விருந்து உண்ண வருபவனோ ஏதோ சண்டை என்று திரும்பிப் போய் விடுவான். எப்படி என் யோசனை?' என்று சொன்னான்.

'அருமையான யோசனை அப்படியே செய்வோம்' என்று அவனும் அடிக்க, அவளும் அழலானாள். திண்ணையிற் படுத்திருந்தவன் சத்தம் கேட்டு, இன்று சாப்பாடு சரிவராது என்று எழுந்து போகலானான்.

அவன் போவதைக் கண்ட குடியானவன், தான் அடிப்பதை நிறுத்தி விட்டு தன் மனையாளைப் பார்த்து, 'நான் நோகாமல் அடித்தேனே!' என்றான். மனைவியும் 'நான் நோவாமல் அழுதேனே' என்றாள் சிரித்தபடி. அப்போது வாசலில் ஒரு குரல் கேட்டது.

'நானும் போகாமல் வந்தேனே' என்றபடி அங்கே நின்றிருந்தான் அந்த வழிப்போக்கன். எழுந்து போனவன் திடீரென அழுகைக்குரல் நிற்கவே திரும்பி வந்து விட்டான்.

குடியானவனோ ஒன்றும் சொல்ல முடியாமல் திகைத்துப் போனான். மனைவியோ 'திருதிரு' என்று விழித்தாள். ஈற்றில் ஒரு வட்டிற் சோறும் சிறுதொகைப் பணமும் அவனுக்குக் கொடுக்க வேண்டியதாயிற்று.

'தர்மம் தலைகாக்கும்' - 'அறம்செய விரும்பு' என்பதற்கிணங்க நாமும் உண்டு மற்றவர்களுக்கும் கொடுத்து உண்டு வாழ்வதே நல்ல வாழ்வாகும்.

ஆகவே, தான தர்மம் செய்யும் பழக்கத்தை நாம் சிறு பராயத்திலிருந்தே கைக்கொண்டு ஒழுகி வருதல் சாலச் சிறந்ததாகும்.

## வண்ணாத்திப் பூச்சியினால் வந்த வினை!

வண்ணாத்திப்பூச்சி பிடிக்கப்போய் 87,000 சதுர மைல் பிரதேசத்தை பிரான்ஸ் பறி கொடுத்த சம்பவம் 1802இல் நிகழ்ந்தது.

ஆஸ்திரேலியாவில் உள்ள விக்டோரியா மாநிலத்தை பிரிட்டனிடம் பிரான்ஸ் இப்படித்தான் பறிகொடுத்தது.

ஆஸ்திரேலியாவில் ஒரு குடியேற்றக் கொலனியை அமைக்க பிரிட்டனும் பிரான்ஸும் தீர்மானித்தன.

1802 இல் இரண்டு நாடுகளும் ஒவ்வொரு கப்பலை அனுப்பின.

பிரான்ஸ் அனுப்பிய 'லிநேச்சுரலிஸ்ட்' கப்பல் தான் முதலில் ஆஸ்திரேலியாவை அடைந்தது.

அடுத்த கணம் அப்பிரதேசத்துக்கு 'நெப்போலியன்' என்று பெயர் சூட்டப்பட்டது.

சில தினங்கள் கழித்து பிரிட்டன் அனுப்பிய 'இன்வெஸ்டிகேட்டர்' என்ற கப்பல் வந்து சேர்ந்தது.

பிரெஞ்சு கப்பலைக் கண்டனர் பிரிட்டிஷ் வீரர்கள்.

ஆனால் பிரெஞ்சு வீரர்களைக் காணவில்லை.

உடனே அப்பிரதேசத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். 'விக்டோரியா' என்று பெயரும் சூட்டினர்.

ஆஸ்திரேலியாவின் அழகான வண்ணாத்திப் பூச்சிகளைப் பிடிக்க காடுகளுக்குள் நுழைந்த பிரெஞ்சு வீரர்கள் சில தினங்கள் கழித்து வந்து பார்த்தனர்.

பிரிட்டிஷ் வீரர்கள் நிலைகொண்டு இருந்ததைத்தான்கண்டனர்.

வண்ணாத்திப்பூச்சி பிடிக்கப்போய் 87,000 மைல் பிரதேசத்தை இப்படித்தான் பிரெஞ்சு பறி கொடுத்தது.

## 52 வருடங்கள் ஆண்மகனை நடித்த இராணுவ ஜெனரல்

52 வருடங்களாக பிரிட்டிஷ் இராணுவத்தில் பணியாற்றினார் ஒரு ஜெனரல். இறந்த போது தான் அவர் ஒரு பெண் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

டாக்டர். ஜேம்ஸ் பாரி என்பவர் தான் அவர். எடின்பரோவைச் சேர்ந்த இவர் 1795 ஆம் ஆண்டு பிறந்தார். ஸ்கொட்லாந்தில் உள்ள பிரபு ஒருவரின் பேத்தி இவர்.

இளவயதில் ஏற்பட்ட காதல் தோல்வியினால் மனம் நொந்து போயிருந்த இவர் சில காலத்தின் பின்னர் ஒரு ஆண் போன்று தமது நடை, உடை, பாவனைகளை மாற்றிக் கொண்டார்.

1813 ஆம் ஆண்டு தமது 18 ஆவது வயது பிரிட்டிஷ் இராணுவத்தினுள் நுழைந்தார்.

இராணுவத்தின் பல தரங்களுக்குப் பதவி உயர்வு பெற்ற இவர் இறுதியில் இராணுவ மருத்துவப் படையில் ஜெனரலாக பதவி வகித்தார்.

தமது பதவிக் காலத்தில் கொதித்துப் பாயும் சுபாவம் உள்ளவராகக் கருதப்பட்ட இவர் எந்த நேரமும் யார் மீதாவது எரிந்து விழுவார்; அல்லது சண்டை பிடிப்பார். எந்த விடயத்திலும் முரண்டு பிடிக்கும் மனிதராகக் காணப்பட்டார்.

எனினும் சிறந்த இராணுவ வைத்தியராக அவர் கருதப்பட்டார்.

1865 ஆம் ஆண்டு தன்னுடைய 70 ஆவது வயதில் அவர் மரணமான பின்னர் தான் ஆணல்ல; பெண் என்பது வெளியே தெரிய வந்தது.

அவருடன் சுமார் 50 வருடங்கள் கூட இருந்து இறுதி வரை ஊழியம் புரிந்த அவரது வேலைக்காரனுக்குக் கூட அவர் ஒரு பெண் என்ற சந்தேகம் கடைசிவரை வரவில்லையாம்.

உலகத்தில் சிறந்த நடிகர் என்று போற்றப்பட வேண்டியவர் இவர் தான்.

## சர்க்கஸ் கோமாளி ஒருவரின் பரிதாப கதை

அனைவரையும் சிரிக்க வைத்த பிரபல சர்க்கஸ் கோமாளி ஒருவரின் பரிதாபமான கதை இது.

அந்தக் கோமாளி, மான்செஸ்டரில் உள்ள டாக்டர் ஜேம்ஸ் ஹமில்டனிடம் சென்றார்,

'என்ன வருத்தம்?'

'டாக்டர் நிரந்தர துன்பத்தினால் அவதிப்படுகின்றேன்'.

அப்படி என்ன துன்பம்?

'உலகத்தில் நிலவும் பயங்கரம் என்னைப் பயப்படுத்துகின்றது. விரக்தியடைந்து விட்டேன். மகிழ்ச்சியைக் காண முடியவில்லை. ஒன்றுமே ஆச்சரியத்தைத் தரவில்லை நான் யாருக்காக வாழ வேண்டும்?

'நீங்கள் உதவாவிடில் நான் தற்கொலை செய்து கொண்டு விடுவேன்'.

'துன்பம் நிரந்தரமானதல்ல, இதில் இருந்து மீளுவதற்கு ஒரே ஒரு வழி உண்டு. நன்றாகச் சிரிக்கவேண்டும்'.

'டாக்டர், அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்'?

'பிரபல கோமாளி கிரிமால்டி நடத்தும் சர்க்கஸுக்கு போய்ப் பாருங்கள் அவர் உங்களைக் குணப்படுத்தி விடுவார்'.

'டாக்டர், நான் தான் அந்தக் கிரிமால்டி — என்றார் அந்தக் கோமாளி துக்கத்துடன்'.

டாக்டர் முகத்தில் அசடு வழிந்தது

### மனிதனால் மட்டுமே முடியும்

முதுகைக் கீழே சரித்து சாய்ந்து படுக்கக் கூடிய ஒரே விலங்கு இனம் மனிதன் தானாம்.

மற்ற விலங்கினங்களினால் இது முடியாத வேலை.

### அரசனின் சாதனை

"Penty wife - Plenty trouble" - இப்படி ஒருவருக்குப் பெயர்.

இந்த நீண்டபெயர் சுருக்கப்பட்டு 'Plenty' என்று அழைக்கப்பட்டது.

இந்தப் பெயருடன் ஆபிரிக்காவில் உள்ள கொங்கோ நாட்டை ஓர் அரசன் ஆண்டு வந்தான். 1873-1894க்கு இடைப்பட்ட காலத்தில் இவரின் ஆட்சி இருந்தது.

பல பெண்களை மனைவிகளாக வைத்து இருப்பதில் இவர் சாதனை ஒன்று புரிந்தார்.

மொத்தம் 415 மனைவிகள் அவருக்கு உண்டு.

அவர்களில் முதல் 55 பேர் ஒருவருக்கு ஒருவர் சகோதரி. ஒரே தந்தைக்குப் பிறந்தவர்கள்.

அடுத்த 35 மனைவிகளும் அதுபோன்றே அமைந்தனர்.

## பெண்களே பெரிதும் விழிப்புடனிருக்க வேண்டும்!

பெண்களுக்குத் தாம் அத்தகைய பலமற்ற இதயமும், பிறகு என்ன ஆகும் என்ற சிந்தனையற்ற பழக்கமும் உண்டு.

அண்மையில் புதுடில்லி நாடாளு மன்றத்தில், பெண்களைக் கெடுப்பவர்கள் ஆண்கள்தாம்! பெண்கள் ஏதாவது கேட்டால் உடனே வாங்கிக் கொடுத்து விடுங்கள்!' என்று ஓர் அங்கத்தினர் பேசியிருக்கிறார்!

இந்த 'உடனே' என்ற சொல்தான் கருத்திற்குரியது. மனைவியிடம் கணவன் அன்பு காட்டுவது உண்மையானால் திட்டம் எப்படி இடம் கொடுக்கிறதோ அதற்கேற்ப நடப்பது தான் சரி. அந்தக் குடும்பத்தில், அதன் நலத்தில் அவர்களுக்கு இருக்க வேண்டிய அக்கறையை மெல்ல இன்முகத்தோடு எடுத்துக் காட்டி, குறிப்பிட்ட ஒன்றிற்காகப் பணத்தைச் செலவிட்டுவிட்டால் இன்னொன்றுக்கு இல்லாமற் போய்விடும் என்பதை எடுத்துக்காட்ட வேண்டும். தன் கணவன், தன் குடும்பம் குலையாமல் நிலையாக நின்று நிலைக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டு தான் கூறுகிறார் என்று மனைவியின் மனத்திலே படும்படி அவனது கருத்துரை கனிவோடு வெளியிடப்பட வேண்டும்.

எந்த மனைவியும், 'எது எக்கேடு கெட்டாலும் கெடட்டும், எனக்கு இந்தப் பொருள் தேவை தான்' என்று துணிந்து கூறமாட்டாள்! அதற்கு-

தன் குடும்பம் என்ற உணர்ச்சி நெஞ்சு நிறைய இருக்க வேண்டும் மனைவிக்கு!

# பஞ்சாமிர்தம் பலாச அமிர்தம்

### பத்திரிகைகள் பல விதம்

உலகிலிருந்து வெளிவரும் புத்தகங்கள் பற்றிய கண்காட்சி ஒன்று ஜேர்மனியில் நடந்தது. உலகநாடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட லட்சம் பத்திரிகைகள் இக் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

1859 ம் ஆண்டு நியுயோர்க் நகரில் 'தி கான்ஸ்டேசன்' என்ற பெயரில் ஒரு பத்திரிகை வெளி வந்தது. இதுதான் மிகப் பெரிய பத்திரிகை. அதன் உயரம் 1.20 மீட்டர்.

1829 ல் 'டையோரியா டீரோழியர்' என்ற பத்திரிகை பிரான்ஸில் வெளி வந்தது. அதன் உயரம் 12.7 செண்டி மீட்டர். இதுதான் மிகச் சிறிய பத்திரிகை.

## துக்கத்தில் கலங்கி ஓரிடத்தில் நிற்கிறார்

### 14 ஆண்டுகளாக இளைஞனின் நிலை

ஒரே இடத்தில் ஆடாமல், அசையாமல் 14 ஆண்டுகளாக நின்ற நிலையில் நிற்கும் ஒரு இளைஞனைப் பற்றி தகவல் இந்தோனேஷியாவில் இருந்து வெளி வந்திருக்கிறது.

1972 இல் தாயார் இறந்த துக்கம் தாளாமல் வீட்டுக் கதவு நிலையைப் பிடித்துக் கொண்டு நின்றவர், அப்படியே நிற்கின்றார் இன்று வரையும்.

வட சுமத்திராவில் சிக்பட் என்ற கிராமம் உண்டு. ஒரு விவசாயின் மகன் கஸ்பி.

தாயார் இறந்த அன்று [illegible]

யோசிக்கத் தொடங்கினான். தந்தையும் மற்றும் உறவினர்களும் புத்திமதி கூறியும் அவன் அசைவதாகத் தெரியவில்லை.

உறவினர்களும் அவனை 'அசைக்கும்' முயற்சியை விட்டுவிட்டார்கள்.

### பட்டுப் பூச்சியின் பெருக்கம்

புதிதாய்ப் பொரித்த பட்டுப் பூச்சியின் நிறை ஒரு இருத்தலில் ஏழு லட்சத்தில் ஒரு பங்கு தான் இருக்கும்.

ஆனால் ஆறுவாரத்தின் பின் — இந்தப் பட்டுப் பூச்சி பல்கிப் பெருகிப் [illegible] நிறை 9,500 [illegible]

## கண்ணைத் துணியால் மூடிக்கட்டி தீர்ப்பு வழங்கும் நீதிபதி

கண்களைத் துணியால் மூடிக்கட்டியபடியே நீதி வழங்கிய நீதிபதி ஒருவர் 1822 இல் அமெரிக்காவில் இருந்தார்.

நீதிபதியின் பெயர் ஜேம்ஸ் ஹோக்கின்ஸ் பெக். மிசூரியைச் சேர்ந்தவர்.

14 வருடங்கள் நீதிபதியாகப் பணியாற்றினார்.

பணியாற்றிய 14 வருடங்களும் கண்களைத் துணியால் மூடிக்கட்டியபடியே வழக்குகளை விசாரித்தார்; தீர்ப்பும் வழங்கினார்.

வழக்கு தஸ்தாவேஜுகள் எல்லாம் நீதிமன்ற லிகிதரால் அவருக்கு வாசித்துக் காட்டப்படும்

விசாரணை முடிந்த பின்னர் தான் கண்களை முடிக் கட்டிய துணியை அவிழ்ப்பார்.

கண்கள் கட்டப்பட்ட நேரத்தில் அவருக்கு உதவியாக சிற்றாழியர் ஒருவர் இருப்பார்.

கண்களைக் கட்டியபடி ஏன் நீதி செலுத்தினார், வழக்காளியையோ? எதிரியையோ வழக்கு விசாரணை முடியும் வரை தான் பார்க்கக் கூடாது என்ற வைராக்கியத்தினால் தான் அப்படி அவர் நடந்து கொண்டார்.

### பற்பொடிக்கு பரீட்சை

நாம் தேய்க்கும் பற்பொடியிலே நம் பல்லை உறுத்தக்கூடிய கடினமான பொருள் எதுவுமே இருக்கக்கூடாது.

நாம் தேய்க்கும் பற்பொடியிலே கொஞ்சம் எடுத்து அதை முகம் பார்க்கும் கண்ணாடியிலே போட்டுத் தேய்க்க வேண்டும்

தேய்த்த பின்னர் அதைத் துடைத்து விட்டுப் பார்த்தால் அந்தக் கண்ணாடி மங்காமல் இருக்க வேண்டும். மங்காமல் இருந்தால் அது சிறந்த பற்பொடி.

இப்படிச் சொல்பவர் ஒரு மேல்நாட்டு டாக்டர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவைகளின் நடவடிக்கைகளை ஆராயும் பொருளியல் ஒரு சமூக விஞ்ஞானம்

**பொருளியல்**
க. பொ. த. ப.
[உயர்தரம்]

மக்களோடு இணைந்ததே பொருளாதாரம். மக்களது தேவைகளை நிறைவேற்றுவதற்கு பொருளாதாரம் அவசியமானதாகும். எனவே மக்களிலிருந்து விடுபட்டு ஒரு பொருளாதாரம் இயங்க முடியாது. பொருளை உற்பத்தி செய்தல், உபயோகித்தல், விற்பனை செய்தல், முதலிடல், சேமிப்பு ஆகிய மனித நடவடிக்கையின் ஒவ்வொரு செயற்பாட்டையும் பொருளியல் ஆராய்வதாக உள்ளது. இப் பொருளியல் பற்றிய சிந்தனை வளர்ச்சி பல வருடகாலங்களுக்கு முற்பட்டது ஆகும். ஒவ்வொரு மனிதனும் அறிந்தோ அறியாமலோ பொருளாதார ரீதியாகச் சிந்தித்து செயல்படுகின்றான். அதாவது ஒவ்வொருவனும் தான் பெறும் வேதனத்தையே முழுவதும் செலவழிப்பதா? அல்லது சேமிப்பதா? என எழுகின்ற கேள்வி பொருளாதார ரீதியான கேள்வியாகவே அமைகின்றது.

**பொருளியலுக்கும் ஏனைய சமூக ஞானங்களுக்குமிடையிலுள்ள தொடர்பு:**

மனித தொடர்புகள் அவற்றின் நடவடிக்கைகள் என்பனபற்றி பொருளியல் ஆராய்கின்றது. எனவே சமூகத் தொடர்பான ஏனைய இயல்களுடன் தொடர்புறுவதனால் இதை ஒரு சமூக விஞ்ஞானம் எனலாம். அதாவது உளவியல், சமூகவியல், அரசியல், வரலாறு, விஞ்ஞானம் ஆகியவற்றுடன் தொடர்புபட்டதாக பொருளியல் அமைவதைக் காணலாம். ஒரு மனிதன் தனியாக இயங்கும் போது எவ்வாறு செயற்படுகின்றான் மற்றவர்களுடன் தொடர்புறும் போது எவ்வாறு செயற்படுகின்றான் ஏன் அவ்வாறு செயற்படுகின்றான் என்பதனை உளவியல் ஆராய்கின்றது. ஆனால் இதே விளக்கம் தான் பொருளியலுக்கும் வேண்டப்படுகின்றது. சமனான வருமானம் பெறுமிருவரில் அப்பணத்தை ஒருவர் முற்றாக செலவிட, மற்றவர் சிறுதொகை சேமிக்கின்றார். இவர்களின் வேறுபாடான செயற்பாட்டினை ஆராய பொருளியலுடன் உளவியலும் வேண்டப்படுகின்றது.

**சமூகவியல் - பொருளியல்**

மனித நடவடிக்கைகளுக்கு சமூகரீதியில் காரணங்களை அறிய முற்படுகின்றது சமூகவியல். எனவே பொருளாதார நடைமுறைகள், பொருளாதார திட்டங்களை அறிய மேண்டுமானால் அவை இயங்குகின்ற சமூக அமைப்பை அறிந்து கொள்ளவேண்டும். இவ்வாறு சமூக அமைப்பை அயறி முற்படும்போது பொருளியல் சமூகவியலுடன் தொடர்புறுகின்றது.

**பொருளியல் - வரலாறு அல்லது புவியியல்**

நாட்டுக்கு நாடு ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்கள் வேறுபடுகின்றன. புவியியல், வரலாற்றுப் பின்னணியே காரணமாக அமைகின்றது. உதாரணமாக அமெரிக்கா கோதுமையை ஏற்றுமதி செய்து தேயிலையை இறக்குமதி செய்கின்றது. இதற்கு பொருளியல் ரீதியான காரணங்களுடன் புவியியல், வரலாற்றுப் பின்னணியையும் இணைத்தே சரியான விடைபெற முடியும். எனவே இங்கு பொருளியல், வரலாறு, புவியியல் என்பனவற்றுடன் தொடர்புறுகின்றது.

**பொருளியல் - விஞ்ஞானம்**

ஆதாரங்களுடன் பிரச்சினைகளை அணுகித் தீர்வு காண முற்படுகின்றது. விஞ்ஞானம் ஆனால் பொருளியல் விதிகள் மேலெழுந்தவாரியான ஒற்றுமை அடிப்படையில் திரட்டப்படுகின்றன. உதாரணம் A என்னும் ஒருவன் இவ்வருடத்தில் இறப்பாரா எனக் கேட்டால் அதற்கு சரிவர விடையளிக்க முடியாது. ஆனால் குறித்த வருடத்தில் எத்தனை பேர் இறப்பார்கள் என அறிய வேண்டின் கடந்த சில வருடங்களின் இறப்பு வீதத்தை அடிப்படையாக வைத்துக் கூறலாம். எனவே இத்தகவலும் மேலெழுந்தவாரியான ஒற்றுமை அடிப்படையின் ஆதாரத்தில் தங்கியுள்ளதனால் விஞ்ஞானத்துடன் தொடர்புறுகின்றது.

**பொருளியல் - அரசியல்**

சமூகத்துக்கு தேவைப்படுகின்ற ஒழுங்கு, கட்டுப்பாடு, நியாயத்துவம் என்பனவற்றை அரசியல் ஆராய்கின்றது. இன்று உற்பத்தி முயற்சியில் ஈடுபடுகின்ற தொழில் நிறுவனங்கள் தமக்கிடையே ஏற்படும் போட்டிகள் பிரச்சினைகளை தாமே தீர்த்துக் கொள்ளாது' அரசாங்க செல்வாக்கைப் பிரயோகித்து இவற்றைத் தீர்க்க அல்லது இவற்றில் வெற்றியீட்ட முற்படுகின்றன. எனவே இங்கு பொருளியல் அரசியலுடன் தொடர்புறுகின்றது.

த. முத்துக்குமாரசாமி
(பி. ஏ. டிப்ளோமா)
ஆசிரியர், நாவற்குழி மகா வித்தியாலயம்

## ஓர் அறிமுகம்

# இரசாயனத் தாக்கங்களின் பொதுக் கோலங்கள்

**விஞ்ஞானம்**
க. பொ. த. ப.
[சாதாரணம்]

எம்மைச் சுற்றி எமது சூழலில் பல்வேறு விதமான மாற்றங்கள் தொடர்ந்து நடைபெற்ற வண்ணமே இருக்கின்றன. இம்மாற்றங்களிற் சில எம்மை உடனடியாகப் பாதிக்கின்றன; சில வற்றின் பாதிப்பை நீண்ட காலத்தின் பின்னரே உணருகின்றோம். இம்மாற்றங்கள் உயிரற்ற பொருட்களுக்கிடையேயும், உயிரங்கிகளுக்கிடையேயும், உயிரற்றவற்றிற்கிடையேயும் நிகழ்வது நமக்குப் புலப்படுகின்றது. இம்மாற்றங்களை நாம் தொகுத்து நோக்குப்போது அவற்றுள் பலவற்றிற்கிடையே சில ஒற்றுமைகளை அவதானிக்கலாம். மாற்றங்களை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தும், அல்லது ஒருமைப்பாட்டைக் காட்டும் பொது அம்சங்களை நாம் பொதுக்கோலங்கள் எனலாம். பல இரசாயன மாற்றங்கள் உயிரிகளின் உடலுக்குள்ளும் புறத்தேயும் நிகழ்கின்றன.

எமது சூழலை அவதானிக்கும்போது இடத்தைப் பிடித்துக்கொள்ளுவனவும் திணிவுடையனவுமானவற்றை சடப்பொருள்கள் என்ற தொகுதியில் சேர்க்கின்றோம். இடத்தை அடைக்காததும், திணிவற்றதும் வேலைசெய்யும் ஆற்றலுடையதுமான மின், ஒளி, ஒலி, வெப்பம் போன்றவற்றை சக்தி எனப்படும் தொகுதியில் அடக்குகின்றோம். சடப்பொருள்கள் பற்றிய மனிதனின் கருத்துக்கள் காலத்திற்குக் காலம் மாறுபட்டு வந்திருக்கிறது. மனிதனின் அவதானிக்கும் திறன், சிந்திக்கும் ஆற்றல், தொழில் நுட்பத்திறன் வளர்ச்சி ஆகியவையே மனிதனின் கருத்துக்களில் விருத்தியை உண்டாக்கின.

சடப்பொருள் மூலகங்களாலானது எனவும், அம்மூலகங்கள் நிலம், நீர், காற்று, நெருப்பு ஆகியன எனவும் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் நம்பினர். சிந்தனையாளர் பலர் தோன்றிய கிரேக்கத்தில் தோன்றிய ஒரு சிந்தனையாளர் டெமோகிறிற்றஸ் (கி. மு. 460). இவருடைய காலத்தில் வாழ்ந்த அறிவியலாளர் பலரின் கூற்றுக்களுக்கு முரணாக சடப்பொருள்கள் அனைத்தும் அணுக்களால் ஆனவை எனவும், ஒரே பதார்த்தத்தில் அணுக்கள் அனைத்தும் ஒரேமாதிரியானவை எனவும் வெவ்வேறு பதார்த்தங்களில் அணுக்கள் வேறுபடுகின்றன எனவும் கருத்து வெளியிட்டார். அவரின் கருத்து அக்காலத்தில் பிரபல்யமடையவில்லை. ஏறக்குறைய சமகாலத்தவரான ஒளவையாரின் ஒரு பாடல் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூரத்தக்கது. திருக்குறள் பற்றிக் கூறும் போது ஒளவையார் கூறியதாவது;

'அணுவைத் துளைத்து
ஏழ்கடலைப் புகுத்திக்
குறுகத் தறித்த குறள்'

இங்கு ஒளவையார் அணுவெனும் பதத்தைப் பயன்படுத்தி, மிகச்சிறிய துணிக்கை என்ற கருத்தையும் தருகின்றார்.

பல நூற்றாண்டுகளின் பின் ஆங்கிலேய தேசத்தவரான ஜோன் டோல்ற்றன் என்பவரே அணு பற்றி விஞ்ஞானரீதியான கொள்கையை வெளியிட்டார் (கி. பி 1810). அவர் கூறியதாவது;

1. மூலகங்கள் அனைத்தும் மேலும் கூறுகளாகப் பிரிக்கப்பட முடியாத, அணுக்கள் எனப்படும் நுண்ணிய துணிக்கைகளால் ஆனவை. (பருமன், நிறை ஆகியவற்றில்)
2. ஒரே மூலகத்தின் அணுக்கள் அனைத்தும் ஒரே மாதிரியானவை வெவ்வேறு மூலகங்களின் அணுக்கள் வேறுபட்ட பருமனும் நிறையுமுடையவை.
3. இரசாயனச் சேர்வைகள் உண்டாகும் போது மூலகங்களின் அணுக்கள் எளிய விகிதத்தில் சேர்கின்றன.

19ம் நூற்றாண்டின் இறுதியில் நிகழ்ந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் டோல்ற்றனின் அணுக்கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று என உணர்த்தின. மேரி கியூரிஅம்மையாரின் ரேடியம் தொடர்பான ஆராய்ச்சி, சேர்வில்லியம் குறூக்ஸ் வெற்றிடத்தினூடாக மின்னைச் செலுத்திச் செய்த பரிசோதனையின் விளைவுகள் இதனைத் தொடர்ந்து J J தொம்சன் எனும் விஞ்ஞானியின் ஆராய்ச்சிகளின் விளைவு ஆகியவை மிகச் சிறிய துணிக்கை அணு என்பது தவறு எனவும், அணுவிலும் சிறிய (ஏறக்குறைய ஆயிரத்தில் ஒரு மடங்கு) துணிக்கைகள் உண்டு என்ற கருத்தையும் பரவச் செய்தன. இவற்றின் விளைவாகவும், பின்னர் அணு பிளக்கப்பட்டமை காரணமாகவும் டோல்ற்றனின் அணுக்கொள்கை திருத்தப்பட்டது. அத்திருத்தங்கள் வருமாறு:

1. இரசாயனத் தாக்கத்தின்போது பிரிகையடையாத அணு எனப்படும் நுண்ணிய துணிக்கைகளினால் மூலகங்கள் ஆக்கப்பட்டுள்ளன.
2. ஒரே மூலகத்தின் அணுக்களில் வேறுபட்ட நிறையுடையவை உண்டு (சமதானிகள்)
3. அனைத்துச் சேர்வைகளிலும் மூலகங்கள் எளிய எண்ணிக்கை விகிதத்தில் சேர்ந்திருக்கவில்லை. [உதாரணம்:- பரபின்கள்]

அணு தொடர்பான ஆராய்ச்சிகளின் விளைவாக பின்வரும் அணுத் துணிக்கைகள் உண்டு எனக் காட்டப்பட்டது.

புரோத்தன்கள், இலத்திரன்கள், நியூத்திரன்கள், மீசோன்கள், நியூத்திரினோக்கள் இவற்றுள் இலத்திரன்கள் தவிர்ந்த ஏனையவை அணுக்கருவில் காணப்படுகின்றன. இரசாயனத்தாக்கங்களின்போது அணுக்கருவில் மாற்றம் நிகழ்வதில்லை. எம்மைப் பொறுத்தவரையில் புரோத்தன்கள், இலத்திரன்கள், நியூத்திரன்கள் ஆகிய மூன்று துகள்களையுமே கருத்திற் கொள்வோம்.

(7ம் பக்கம் பார்க்க)

அ. சோமாஸ்கந்தன்
நல்லூர் வலய சேவைக்கால கல்விஆலோசகர்




# சுண்ணக் கற்களைக் கண்டபடி வெட்டி எடுப்பதால் பக்க விளைவுகள் பல

கடற்கரையோரமாக நிலநீர் வேகமாக வெளியேற்றப்படுவதனால் உவர்நீர் உட்பகுதிகளை நோக்கி விரைவாக ஊடுருவக் கூடிய சாத்தியக் கூறுகள் ஏற்பட்டுள்ளன. மேலும் கடலை நோக்கி அகற்றப்படும் நீரை பயன்பாட்டின் பின் திரும்பவும் பயன் படுத்தினால் (RE - CYCLING) நீர் வெளியேற்றுவதைக் குறைத்து உவரடைதலையும் குறைக்கக்கூடியதாயிருக்கும்.

இத் தொழிற்சாலையின் மூன்றும் சட்ட வேலைத் தளம் அமைக்கப்பட்ட பின் சுண்ணாம்புக் கற்பாறைகள் வெட்டி எடுக்கப்படும் நிலப்பகுதி விஸ்தரிக்கப்பட்டு மேலும் கடற்கரையோரமாகவும், பயிர்ச் செய்கைக்கேற்ப செம்மண் பகுதிகளுக்கும், நன்னீர் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது. இந்தகைய நடவடிக்கையினால் மேலே காட்டப்பட்டுள்ள தீங்குகள் மேலும் அதிகரிப்பதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு வெட்டி எடுக்கப்படும் பகுதிகள் மீண்டும் நிரவப்படாத நிலையிலிருப்பதை ஆராயும் பொழுது குடாநாட்டின் மக்கள் வாழும் இடங்களுக்கும், பயிர்ச் செய்கைக்கும் ஏற்ற நிலப் பகுதி குறைவடைந்து வருவதைக் காணலாம். இத்தகைய பகுதிகளை மீண்டும் நிரப்பி, நிலப்பரப்பினை அதிகரிக்க வேண்டுமாயின் 6. 2 மில்லியன் தொன் மண் தேவைப்படுமென மதிப்பிடலாம். இந்த அளவான மண்ணை யாழ். குடாநாட்டின் எப்பகுதியிலிருந்தும் கொண்டு வரக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லாமையினால், இப் பள்ளங்கள் நிரப்பப்படாத நிலையிலேயே விடப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

இவ்வகையில் சிமெந்து உற்பத்திக்காக 1950ம் ஆண்டுக் காலப் பகுதியிலிருந்து 1982ம் ஆண்டு வரை ஏறத்தாழ 5.0 மில்லியன் தொன் சுண்ணாம்புக் கல் வெட்டி எடுக்கப்பட்டுள்ளதென மதிப்பிடலாம். இதிலிருந்து வருடாந்தம் சராசரியாக 150,000 தொன் சுண்ணாம்பு கல் இச்சேவைக்காக வெட்டியெடுக்கப்படுகின்றதென மதிப்பிடலாம்.

இப்பொழுது பயன்படுத்தப்படுகின்ற அளவில் சுண்ணாம்புக் கல் வெட்டியெடுக்கப் பட்டுப் பயன்படுத்தப்படுமானால் இத்தொழிற்சாலைக்காகத் தற்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள நிலப் பகுதியிலிருந்து 3. 25 மில்லியன் தொன் சுண்ணாம்புக் கல் வெட்டியெடுக்கப்படலாமென்றும், இது இன்னும் 20 வருடங்களுக்கே போதுமானதென்றும் மதிப்பிடலாம்.

இப்பாகங்களில் சுண்ணாம்புக்கல் கல் வெட்டியெடுக்கப்படும் பட்சத்தில் மேலும் 300 ஏக்கர் நிலப்பரப்பு எதுவித பாவனைக்குமுதவாத பகுதியாக மாற்றமடையும்.

மேலே விரிவாகக்கூறப்பட்டவற்றிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுண்ணாம்புக் கற்பாறைகள் திட்டமிடப்படாத வகையில் வெட்டியெடுக்கப்பட்டு வருவதனாலேற்படக்கூடிய பக்க விளைவுகளை பின்வருமாறு சுருக்கமாக வகைப்படுத்தலாம்.

1. வளமான மண்ணையும், நன்னீரையும் கொண்டுள்ள பயிர்ச் செய்கைக்கேற்ற நிலம் இழக்கப்படுகின்றது.
2. மக்கள் வா[illegible] களை ஏற்படுவதக்கேற்ற நிலப்பரப்பு குறைவடைந்து செல்கின்றது.
3 நிலநீர்த் தாங்கு படுக்கையின் அளவு குறைக்கப்படுகின்றது.
4. நிலநீரில் உவர்த்தன்மை அதிகரிக்கின்றது.
5. கடலை நோக்கி வெளியேறும் நிலநீரின் அளவு அதிகரிக்கின்றது.
6. தொழிற்சாலையின் சுற்றுடலிலுள்ள பயிர்ச் செய்கை, குறிப்பாக வெற்றிலைச் செய்கை வீழ்ச்சியடைந்து தருகின்றது.
7. யாழ்ப்பாணக்குடாநாட்டின் எதிர்கால வீழ்ச்சி நடவடிக்கைகளுக்கு, குறிப்பாக தெருக்கள், வீடுகள், கட்டடங்கள் அமைத்தலுக்குத் தேவையான சுண்ணாம்புக் கல்லின் அளவும், பயன்பாட்டுக் காலமும் குறைவடைந்து வருகின்றது. ஏனெனில் வெட்டியெடுக்கக் கூடிய சுண்ணாம்புக் கல்லின் [illegible] வெட்டியெடுக்கப் படும் கல்லின் அளவு [illegible] கரித்துச் செல்லுதலினாலாகும்.

இவற்றைக் கவனிக்குமிடத்து யாழ்ப்பாணக் குடாநாட்டின் விருத்தியில் எந்தெந்தத் துறையில் சுண்ணாம்புக் கற்பாறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்பதைத் தீர்மானித்தல் மிக அவசியமானதொன்றாகும். இவ்வகையில் பின்வரும் ஒழுங்கில் இவற்றின் முக்கியத்துவமும் இவை சம்பந்தமான சில ஆலோசனையும் கொடுக்கப்படுகின்றன.

1. நிலநீரினைத் தேக்கி வைத்தல், பாதுகாத்தல், மாசுபடுதலைத் தடுத்தல்.
2. வீடுகள், கட்டடங்களுக்குத் தேவையான சுண்ணாம்புக் கல் வெட்டியெடுக்கக் கூடிய இடங்களை வேறுக்கிப் பாதுகாத்தல்.
3. தெருகள், ஏனைய போக்குவரத்துப் பாதைகளை இடுவதிலும், பராமரிப்பதிலும் சுண்ணாம்புக் கல்லின் அளவைக் குறைத்தல்.

இத்தேவைக்குக் குடாநாட்டிற்கு வெளியிலிருந்து கருங்கல்லைக் கொண்டு வந்து பயன்படுத்தினால் மழைக்காலங்களில் குடாநாட்டின் தெருக்களில் ஏற்படும் கரைசல், குழிகளைக் குறைத்துஇவற்றினாலேற்படும் பராமரிப்புச் செலவையும் குறைக்கக் கூடியதாயிருப்பதுடன், அரிய

([illegible] பக்கம் பார்க்க)

★ த. குணசேகரம் ★
நீரியல் புவிசரிதவியலாளர்



# ராஜீவ் காந்தியின் அணுகு....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையிலான பெரும் இடைவெளி' என்று மேற்கு நாட்டு சிரேஷ்ட ராஜதந்திரி ஒருவர் சொன்னார்.

இனப்பிரச்சினைக்கும் ஜெயவர்த்தனா நினைத்தால் தீர்வுகாண முடியும் என்று டில்லி கொண்டு இருந்த நிலை, மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்க ஜெயவர்த்தனா காட்டிய ஆர்வத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

பேச்சுக்கள், பேச்சுக்கள் பற்றிய பேச்சுக்கள் எல்லாம் காலத்தைக் கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்டன என்று புதுடில்லி கருதத் தொடங்கியுள்ளது.

**நிர்மானமான விஷயம்**

பூர்வாங்க நடவடிக்கையாக இராணுவத் தீர்வைக் கண்டு, கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக திருமலையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இராணுவ பலத்தைப் பெருக்கிய பின்னரே அரசியல் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்பதில் இலங்கை அரசு ஏறக்குறைய தீர்மானமான விஷயம் என்றே ஊகிக்க வேண்டி உள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள முட்டுக்கட்டையை உடைக்க முடியாது.

ஜனவரி 30இல் விசேட தூதர் மூலம் அனுப்பப்பட்ட இலங்கை அரசின் 57 பக்கப் பதிலினால்தான் திரு. பண்டாரியின் விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாக நினைக்கக் கூடாது.

அரசியல் உண்மைகளைப் புரியாதவர்களினால் தயாரிக்கப்பட்ட சட்ட ஆய்வுதான் இந்த 57 பக்கப்பதில் என்று கூறி கூட்டணித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அதனை நிராகரித்து விட்டார்.

அரசின் பதில் இந்திய வெளிநாட்டு அமைச்சுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

ஆனால் இது கடைசித் துரும்பு மட்டுமே.

**திடீர் திருப்பம்**

ஓமான், பஹாமாஸ், டாக்கா ஆகிய இடங்களில் அமைச்சர் லலித் அத்துலத் முதலியைச் சந்தித்துப் பேசிய சமயங்களில் எல்லாம் திரு. காந்தி நடுவர் என்ற நிலையில் பொறுமை இழந்தவராகவே தென்படத் தொடங்கினார்.

திரு. காந்தியின் சிந்தனைகள், அச்சமயங்களில் தனது உள்நாட்டுப் பிரச்சினை, பொருளாதாரச் சிக்கல்களில் தான் இருந்தன.

ஜனவரிக் கடைசியில் திரு. காந்தி சென்னை வந்தது, டில்லி திரும்பும் போது கூட்டணித் தலைவர்களுடன் திரு. காந்தி நடத்திய பேச்சுக்கள், இலங்கை அரசின் 57 பக்கப் பதில், இரண்டு நாள் கொழும்பு விஜயத்தை திரு. பண்டாரி ரத்துச் செய்தது—

இவை எல்லாம் பிரதமர் ராஜீவ் காந்தி கடைப்பிடித்து வந்த புதிய அணுகு முறையில் ஏற்பட்ட திடீர் திருப்பங்களாகும்.

இந்தியாவின் இப்புதிய நோக்கு வழமையான ராஜதந்திர வட்டாரங்கள் மூலம் கொழும்புக்கு அறிவிக்கப்பட்டு விட்டதாக டில்லியில் உள்ள செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை சம்பந்தமான இந்தியாவின் ராஜதந்திரம் கீழ்க்கண்ட விதமாக அமைய முடியும்:

(அ) இராணுவத் தீர்வு ஒன்று தான தேவை என்று நீங்கள் நடந்தால், உங்களுக்கு அதிஷ்டம் உண்டாகட்டும். இராணுவ இலக்கை எப்போது அடைகிறீர்களோ அப்போது எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

அரசியல் தீர்வு காணுவதற்கான அக்கறை இருந்து அதற்கு எமது உதவி தேவைப்பட்டால் மட்டுமே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

(ஆ) அதே நேரத்தில் பேச்சுக்கள் நடத்துவதற்கான புதிய சிந்தனைகள், ஆலோசனைகள், சிபார்சுகள் முதலியவற்றை இந்தியா உருவாக்காது.

(இ) பயங்கரவாதத்தைப் பொறுத்தவரை இந்தியா உதவ விரும்புகிறது; உதவியும் உள்ளது.

ஆனால் தீவிரவாதம், தமிழர்களின் அரசியல் நிகழ்ச்சிகள், கொள்கைளுடன் சம்பந்தப்பட்டது. அந்தத் தமிழர்கள் இந்தியாவின் மாநிலம் ஒன்றுடன் மிக நெருங்கிய தொடர்புள்ளவர்கள். அந்தப் பிணைப்பில் இருந்து இந்தியா தன்னை விடுவிக்க முடியாது.


(ஈ) இந்தியா, இலங்கையின் இறைமை, ஐக்கியத்துக்காக துணை நிற்கும்.

அதன் கருத்து இந்தியாவின் ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு முதலியவற்றைப் பணயம் வைத்து அல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 6




அனுப்புபவர் பெயர்:- ……………………

விலாசம்:- ……………………

……………………

கையெழுத்து:- ……………………

### இடமிருந்து வலம்:

1. இந்தியா என்றால் இவர் என்று கூறப்பட்டது.
3. பாரத தேசபிதா
5. தவசிரேஷ்டரை இப்படியும் அழைப்பர்.
6. நவரத்தினங்களில் ஒன்று.
8. மேல்நாட்டு குடிவகை.
11. வாழ்வில் இது வருவது சகஜம்.
14. வாழ்க்கை முடிவில் ஊர்வலம் போவது இதில்தான்.
15. அழகு, பொலிவு, செல்வம்.
16. முகத்தில் வருவது மாறி வருகிறது.
18. தேர் இழுக்கத் தேவை.
19. இந்தியாவின் தென் பகுதியில் பரந்து வாழும் தொன்மைமிக்க இனங்களையும் அவர்களது மொழிகளையும், முறைகளையும் இது குறிக்கும்
20. உயிர் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானது.

### மேலிருந்து கீழ்:-

1. ''ஒரு வில், ஒரு இல், ஒரு சொல்'' என வாழ்ந்து காட்டியவன்
2. உதயன்
3. இதனால்தான் சந்ததிகளே உருவாக முடிகிறது.
4. மாறுபடல்
7. கணவன் - மனைவி
9. இது இனிக்கும்
10. இப்படி நட என்பது முதுமொழி
11. பெண்களைப் பற்றிப் பாடும் கவிஞர்கள் வர்ணிக்கும் முக்கிய அங்கங்களில் ஒன்று.
12. கோளத்தின் உச்சி முனை.
13. மாறி, மாறி வருவது இங்கும் மாறி வந்திருக்கிறது.
14. புரட்சிக் கவிஞன்
17. உலகம்

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் 'சொற்சிலம்பம்' குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.
3. 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற்சிலம்பம்' போட்டி இல 6, சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
7. த ஷப்ரு-உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், ஷப்ரு யுனிக்கோ பிறின்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்கு பற்ற முடியாது.

* சொற்சிலம்பம் போட்டிகளில் பங்கு பற்றும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சில சமயங்களில் மூன்றுக்கும் அதிகமான வாசகர்களும் சரியான விடையை அனுப்புகிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் சரியான விடை எழுதியோரிலிருந்து அதிர்ஷ்ட சீட்டு மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை வாசகர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 4

வெற்றி பெற்றவர்கள் விவரம்:-

1 ஆம் பரிசு:- சு. சர்வேஸ்வரன், திக்கரை, காரைநகர்.

2 ஆம் பரிசு:- செல்வி. நித்திலா மாணிக்கம் அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

3 ஆம் பரிசு:- வே. தேவராஜா சாயுடை, மாவிட்டபுரம், தெல்லிப்பளை.

### சொற்சிலம்பம் 4 விடைகள்

இடமிருந்து வலம்:-

1. அசமந்தம் 6. கதிரை
7. தறி 8 நடுநிலை
9. தியானம் 11 விதி
13. யது 14. பிசகு
17. பக்கம் 18. எதுகை
19. பசு 21 கருமை
22. விம்பம்

மேலிருந்துகீழ்:

1. அகத்தியர் 2. சதி
3. மறை 4. தண்டு
5. நெறி 7. தலைவி
8. நம்பிக்கை 10. யாது
12. திகதி 15. சக
16. கும்பம் 17. பதுமை
18. எரு 20. சுப

## நட்சத்திர முகவரி

சினிமா வாசகர்கள் தங்களது அபிமான நட்சத்திரங்களின் முகவரிகளைக் கேட்டு, தினசரி எமக்குக் கடிதங்கள் எழுதிய வண்ணம் இருக்கிறார்கள்.

அவர்களது கோரிக்கைக்கு இணங்க ''சஞ்சீவி''யில் நட்சத்திரங்களின் முகவரிகள் தொடர்ச்சியாக வெளிவரும்.

**சரிதா**
18, கிழக்குத் தெரு,
மேற்கு சி. ஐ. டி. நகர்
சென்னை - 35.

**ரேவதி**
77, ஹரபா காட்டேஜ்,
டிஃபென்ஸ் காலனி,
சென்னை - 97.

**சிவாஜிகணேசன், பிரபு**
'அன்னை இல்லம்'
16, போக் ரோட்,
சென்னை - 17

## செய்திக்கதிர்

### பெப் 21 - பெப் 27

**வெள்ளி:**
- தமிழ் மொழி மாநில அந்தஸ்துக்கு இந்தியா முழு ஆதரவு

**சனி:**
- பூஸாவில் உள்ள தமிழ் இளைஞரை தென் பகுதியில் குடியமர்த்த ஏற்பாடு
- காங்கேசன் துறையில் திடீர் ஷெல் தாக்குதல்.
- தங்கவேலாயுதபுரம் பகுதியில் 60 பேர் கொலை; பகிரங்க விசாரணைநடத்தக் கோரிக்கை.

**ஞாயிறு:**
- இனியும் சகிக்க முடியாது: எம். ஜி ஆர் பிரதமர் ராஜீவிடம் முறையீடு.
- தாக்குதலை நிறுத்தினால் மட்டுமே பேச்சு லண்டனில் சிவாதகவல்-
- அமெரிக்க அல்லது இந்திய சமஷ்டி முறை: ஜே. ஆருக்கு எட்வர்ட் கென்னடி சிபார்சு.

**திங்கள்:**
- தஞ்சம் கோரிய தமிழர் நிலையை ஆராய ஐ. நா. புனர்வாழ்வு ஆணையாளர் கொழும்பு வருகிறார்.

**செவ்வாய்:**
- மார்க்கோஸ் மணிலாவைவிட்டு ஓட்டம்
- ஜே.ஆர் - டிக்ஸிற் அவசர பேச்சு.
- மன்னாரில் நிலக்கண்ணிவெடி: 11 சிப்பாய் பலி என்று புலிகள் அறிவிப்பு.

**புதன்:**
- இலங்கை அரசுக்கு இந்திய காலக்கெடு.
- பிலிப்பீன்ஸ் ஜனாதிபதியாக திருமதி அக்கியூனோ பதவி ஏற்பு.

**வியாழன்:**
- தாவடி, சுதுமலை, கருவில், மாதகல் பகுதிகளில் மீண்டும் விமானத் தாக்குதல்; 3 பேர் பலி.
- அடக்கு முறையை எதிர்த்து யாழ். நகரில் பேரணி
- ஐ. நா அகதிகள் புனர்வாழ்வு ஆணையாளர் கொழும்பு வந்து சேர்ந்தார்.

# மற்றவர்களைவிட வித்தியாசமாக நடிக்க முயற்சிக்கிறாராம் விஜி

அடுத்தடுத்து பல வெற்றிப் படங்களில் நடித்து பின்னர் சிறிது காலம் திரையில் தோன்றாதிருந்தார் விஜி

இப்போது விஜி 'மிஸ்டர் பாரத்'' படத்தின் மூலம் மீண்டும் பிரபலமாகியுள்ளார்.

புன்னகை அரசி கே. ஆர். விஜயாவைப் போலவே, வரிசையான அரிசிப் பற்கள். அழகான சிரிப்பு.

இதனால் இவரது ரசிகர்கள் ''புன்னகை இளவரசி'' என்று இவரை அழைக்கிறார்கள்.

விஜி, ஓம் செல்வி ஆர்ட்ஸ் ''பதில் சொல்வாள் பத்திரகாளி''படத்தில் அம்மனாக நடிக்கிறார்.

அம்மனாக நடிக்கும் அனுபவம்பற்றி அவர் கூறுகிறார்.

''அம்மனாக நடிப்பது எனக்குப் புதிதல்ல. ஏற்கனவே நவக்கிரக நாயகி, உக்ர ரூபம் (தெலுங்கு) ஆகிய படங்களில் அம்மனாக நடித்திருக்கிறேன்.

ஆனால் அவை அமைதியான அம்மன் ரூபங்கள்.

**தயாரிப்பு: பேரின்பம்**

இந்தப் படத்திலோ ''பத்ரகாளி''யாக நடிக்கிறேன்.

சாதாரண சமூக கேரக்டர்களாக இருந்தால் மனசுக்குள் எந்தவித பாதிப்பும் இராது. ஆனால் இவ்வேடம் மனத்தினுள் ஒரு பக்கம் சந்தோஷமாகவும் மறுபக்கம் பயமாகவும் இருக்கிறது.

அம்மன் வேடம் ஏற்பதால் அசைவ உணவை விட்டுவிட்டேன். விரதம் இருந்து வருகிறேன்.

அனுபவ நடிகையான கே ஆர் விஜயாவும் இப் படத்தில் நடிக்கிறார்.

எனதுவேட பொருத்தத்தைப் பாராட்டி ஆசி வழங்கினார் விஜயாம்மா.

எத்தனையோ பேர் அம்மனாக நடித்துள்ளார்கள்.

ஆகலால் நான் வித்தியாசமாகச் செய்ய வேண்டும் என்று மிகவும் கவனமாக நடிக்கிறேன்'' என்றார்

## ★இதயம் பேசுகிறது★

* என்னிடமுள்ள ஒரு குணம் அது நல்ல குணமோ எனக்குத் தெரியாது இன்னொரு ஆர்டிஸ்டைப் பற்றி ஏதாவது வம்பு உண்டான்னு அலையறது கிடையாது.

— கே. ஆர். விஜயா

* இளையராஜா இலக்கியவாதிகளை இதயத்திலே தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறார். காரணம் அவரும் ஒரு இலக்கியவாதி! என்னைப் போன்ற இலக்கியவாதிகளுக்கு அவரது ராஜ சபையில் அங்கீகாரம் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

— கவிஞர் மு. மேத்தா

* என்னைச் சந்திக்கிற புது இயக்குநர்கள் வழக்கமாக சொல்கிற முதல் வார்த்தையே ''நீங்கதான், அந்தக் காலத்திலிருந்தே என் மானசீக குரு'' என்பதுதான்இதைவிட வேறென்ன சந்தோஷம் வேணும் எனக்கு?

- கே. பாலச்சந்தர்

# வெள்ளித்திரை



ராதிகா

## சினிமா உலகில்

### புதிய காதல் 'கிசு கிசு'

திரையுலகில் 'கிசு கிசு' வுக்குப் பஞ்சமே இல்லை. சில 'கிசு கிசு'க்கள் உண்மையாகி விடுவதும் உண்டு

இன்றைய லேட்டஸ்ட் இதுதான்: ராதிகா மறுமணம் செய்து கொள்ளப் போகிறாராம். அதுவும்காதல் திருமணமாம்.

சினிமா வட்டாரங்களில் இதற்கு ஆதாரமாகச் சில காரணங்களும் கூறப்படுகின்றன.

அண்மைக் காலங்களில் அவர் பத்திரிகைகளுக்கு அளிக்கும் பேட்டிகளில் சீதன ஒழிப்பு, விதவை மறுமணம் ஆகியவற்றை ஆதரிக்கும் கருத்துக்களைக் கூறிவருகிறார்—

சினிமாவிலும் இப்படிப்பட்ட பாத்திரங்களையே அதிகமாக விரும்பி ஏற்று நடிக்கிறார்— இவைதான் அவர்கள் கூறும் காரணங்கள்.

இதுவும் உண்மையாகுமோ என்னவோ, பொறுத்திருந்து பார்ப்போம்.

## திரை உலகில்

'மைதிலி என்னைக் காதலி'யில் அறிமுகமாகியுள்ள சங்கீதா தெலுங்கில் படுபிஸியாம் ஆந்திர முதல்வரின் புதல்வரான பாலகிருஷ்ணாவுடன் ஒன்பது படங்களில் நடித்து வருகிறாராம் அவர்.

*

சிலுக்கு கதாநாயகியாக நடிக்கும் ஒரு படத்தில் ஜோதிலட்சுமி, ஜெயமாலினி, அனுராதா, டிஸ்கோ சாந்தி, பபிதா இன்னும் பல சவர்ச்சிக் கன்னிகள் நடிக்கப்போகிறார்களாம். படம் எப்படி இருக்கும்?

*

சினிமா டான்ஸ் மாஸ்டர் கே. எஸ். ரகுராம் தனது வீட்டில் டிஸ்கோ, வெஸ்டர்ன், பரதநாட்டிய வகுப்புக்களை நடத்துகிறார் டிஸ்கோ சாந்தியும் அங்கு அடிக்கடி தலை காட்டுகிறார் ஏன் பரத நாட்டியம் கற்பதற்கோ?

*

ஏ. வி. எம். ஸ்தாபனத்தின் படத்தை இராம். நாராயணன் இயக்கலாம் என்று கதையடிபடுகிறது. விஜய்காந்த், அர்ஜுன— இரண்டு பேரில் ஒருவர் கதாநாயகன்.

# அனுபவம்-ஆர்வம் மிக்க சென். ஜோன்ஸ் அணி

## இன்று பற்றிக்ஸ் அணியுடன் மோதல்

— விளையாட்டுச் செய்தியாளர்:- சண் ஜோண்சன் —

யாழ்ப்பாணம், மார்ச்.1 வடபகுதி கிரிக்கெட் ரசிகர்களின் ரசனைக்கு விருந்தாக வடபகுதியில் இருக்கும் கல்லூரி கிரிக்கெட் அணிகளை ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம்.

இந்த வரிசையில் முதலாவதாக சென் - பற்றிக்ஸ் கல்லூரி அணியை அறிமுகப்படுத்தியிருந்தோம்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியை அறிமுகப்படுத்துகிறோம்.

திறமையும் ஆர்வமும் மிக்க விளையாட்டு வீரர்களைக் கொண்டது சென் ஜோன்ஸ் அணி. இவ் வருடத்தில் இதுவரை ஐந்து மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டங்களில் கலந்துகொண்ட இந்த அணி நான்கு ஆட்டங்களில வெற்றி பெற்றது ஓர் ஆட்டத்தில் தோல்வி ஏற்பட்டது.

இந்த அணியில் ஆடும் வீரர்கள்:-

ஏ. வாகீசன்:- அணித் தலைவர், கவர்ச்சிகரமான வலதுகை துடுப்பாட்ட வீரர் - வலதுகை வேகப் பந்து வீச்சாளர். 4ஆவது வருடமாக ஆடுகிறார். சிறந்த பந்து தடுப்பாளர்.

ஜே. பி. ஜெயவீரசிங்கம்:- அணியின் உப தலைவர், பந்தை மிக வேகமாக அடிப்பதில் பெயர் பெற்றவர். வலதுகை துடுப்பாட்டக்காரர். வலதுகை நடுத்தரவேக பந்து வீச்சாளர் - இந்த அணியில் 3 ஆவது வருடமாக ஆடுகிறார்.

கே. அகிலன்:- அணியின் வலதுகை ஆரம்ப வேகப் பந்துவீச்சாளர். வலதுகை துடுப்பாட்ட வீரர்.

ஏ. கணேஸ் பஞ்சன்:- அழகாகவும், அபாரமாகவும் ஆடும் வலதுகை துடுப்பாட்டக்காரர். அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவர். வலதுகை சுழல் பந்து வீச்சாளர்.



எம். நிகால்:- வலது கை நடுத்தரவேக பந்து வீச்சாளர்- வலது கை துடுப்பாட்டவீரர். சிறந்த பந்து தடுப்பாளர் என்று விமர்சிக்கப்படுபவர்.

பி. ஜே. ஆர். சின்னையா:- வேகமாக ஓட்டங்களைக்குவிக்கும் வலது கை துடுப்பாட்ட வீரர் சிறந்த பந்துதடுப்பாளர்.

ஏ.கே, ஞானசேகரம்:- லாவகமாகத் துடுப்பெடுத்தாடும் வலது கை துடுப்பாட்டவீரர். அணியின் தொடக்க துடுப்பாட்டக்காரர்.

மேற்குறிப்பிடப்பட்டவர்கள் இந்த அணியில் இரண்டாவது ஆண்டு ஆடுபவர்கள்.

இனி வரும் வீரர்கள் அணிக்கு புதுமுகங்கள்.

என். ராஜ்குமார்:- அணியின் ஆரம்ப வலதுகை துடுப்பாட்ட வீரர். வலதுகை வேகப் பந்து வீச்சாளர்.

பி. பார்த்திபன்:- வலதுகை துடுப்பாட்ட வீரர். வலதுகை நடுத்தர வேக பந்துவீச்சாளர். சிறந்த பந்து தடுப்பாளர்.

எஸ். சுதர்ஸன்:- வலதுகை துடுப்பாட்ட வீரர்.

என். ரகுராம்:- வலதுகை நடுத்தர வேக பந்து வீச்சாளர். இடதுகை துடுப்பாட்டவீரர்.

ஜி ஜி. செந்தில்நாதன்:- வலதுகை துடுப்பாட்ட வீரர். வலதுகை சுழல் பந்து வீச்சாளர்.

எஸ். சஞ்ஜீவன்:- இடதுகை நடுத்தர வேக பந்து வீச்சாளர். வலது கை ஆட்டக்காரர்.

எஸ் ரி. அகிலன்:- இடதுகை துடுப்பாட்ட வீரர் வலதுகை நடுத்தர வேக பந்து வீச்சாளர்

கே. அசோகன்:- வலது கை துடுப்பாட்ட வீரர் மிகச்சிறந்த பந்து தடுப்பாளர் என்று பெயர் பெற்றவர்.

ஆசிரியர் திரு. கே. எஸ். இ. சேவியர் அணிக்கான பயிற்சிகளை அளிக்கிறார்.

விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. என். எஸ். தனபாலன் அணியை சிறப்பாக வழி நடத்தி வருகிறார்.

சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இன்று சனிக்கிழமை சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியுடன் மோதுகிறது

மட்டுப் படுத்தப்பட்ட ஓவர் முறையிலான இந்த ஆட்டம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்

## VAN தேவை

15 பிள்ளைகளை ஏற்றக்கூடிய, நல்ல நிலைமையில் உள்ள ஓர் VAN தினசரி காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை பாவிப்புக்கு வாடகைக்குத் தேவை. சாரதியின் சம்பளமாக 1200/- வழங்கப்படும். எரிபொருள் வழங்கப்படும். Van னில் ஏற்படும் சிறு பிழைகள் திருத்திக் கொடுக்கப்படும். வாடகை விவரங்களுடன் 7-3-86க்கு முன்னர் கீழே உள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 10, உதயன் மே பா, 15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


**நவா மினி**
(உஷா மினி முன்பாக)
248 | 5, K. K.S. Road,
JAFFNA.
''ரம்போ''




## சிறை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

'கொப்பருக்கு இது காணுமே கொழுவல் தொடுக்க! கீரையை வாயில வைச்சதும் சன்னதம் கொள்ளப் போகிறுரே!'

திலகம் வழக்கமாக இப்படி ஏதும் என்றால் பதறி ஓடியாடி ஏதாவது செய்வாள்.

கனகசபைக்கு சமையல் எல்லாம் வாய்க்கு வள்ளிசாய் இருக்க வேண்டும்.

உப்பு சற்று தாக்கலாய் இருந்தாலும் ஒரேயடியாய் சத்தம் போடுவார்.

'தாயும் மோளும் என்னப்பா செய்தனீங்கள்! உப்பு என்ன விளைஞ்சு கிடக்குதே இஞ்சை? மனுசன் வாயில வைக்க ஏலாமல் அள்ளிப் போட்டிருக்கு .'

சொல்லிவிட்டு, சாப்பாட்டுத்தட்டை ஒரு தள்ளுத் தள்ளுவார்! இதற்குப் பயந்து பூரணமோ திலகமோ சாப்பாட்டில் உப்புப் புளி விஷயத்தில் வெகு கவனமாய் இருப்பார்கள்.

ஆனால் இன்று திலகம் சிரித்துக் கொண்டு பேசாமல் நின்றாள்.

பூரணத்துக்கு இது அதிசயமாகப் படவில்லை. தாயறியாத சூல் உண்டோ?

'சரி சரி நீ வா இஞ்சாலை...'

திலகம் மெதுவாக நகர்ந்து விட்டாள்.

அவளின் மனம் ஒரே பரபரப்பாக இருந்தது. கற்பகம் தாயுடன் பேசிக்கொண்டிருந்ததெல்லாம் அவளும் கேட்டிருந்தாளே!

ஓடோடிச் சென்று தன் பெட்டியைத் திறந்தாள். ஒரே சீராக அடுக்கி வைக்கப்பட்டிருந்த சிவனேசவின் கடிதங்களின்மத்தியில் அவனது போட்டோ கிடந்தது. ஆசை தீர அதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

## சுண்ணக்கற்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

மூலவளமான சுண்ணாம்புக் கல் ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்தப்படலாம்.

தற்பொழுது சீமெந்து உற்பத்திக்காக சுண்ணாம்புக் கல் அகழ்ந்தெடுக்கப்படும் பகுதிகளில், மேற்பரப்பிலிருந்து 15 அடி ஆழத்தின் கீழ் அகழ்ந்தெடுக்காமலிருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இங்கு தொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களும், ஆலோசனைகளும் இக்குடாநாட்டின் விருத்தியில் அக்கறையுடையோரின் கவனத்திற்காக சுருக்கமாகவே கொடுக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றைத் தயாரித்து, இதற்கான கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்வதற்கும் எமது ஸ்தாபனத்தால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (முற்றும்)

## இரசாயன.....

( 6ம் பக்கத் தொடர்ச்சி)

| | புரோத்தன் | இலத்திரன் | நியூத்திரன் |
|---|---|---|---|
| திணிவு | 1 | 1/1840 (பூச்சியம்) | 1 |
| மின்னேற்றம் | நேர் | மறை | ஏற்றமில்லை |
| கண்டுபிடித்தவர் | ருதபோர்ட்டு | J. தொம்சன் | சட்விக் |
| கண்டுபிடித்த ஆண்டு | 1897 | 1911 | 1931 |

தற்போது ஏற்கப்பட்டிருக்கும் அணுவின் கட்டமைப்பைத் தந்தவர் டென்மார்க் தேச விஞ்ஞானியான நீல்ஸ்போர் (Neils Bohr) ஆவர் அவரின் கருத்துப்படி அணுவானது கருவை மத்தியில் கொண்டுள்ளது; இலத்திரன்கள் கருவைச் சுற்றி கோளவடிவ ஓடுகளில் இயங்குகின்றன. இலத்திரன்கள் கருவைச் சுற்றி வரும் பாதைகள் ஓடுகள் அல்லது சக்தி மட்டங்கள் எனப்படுகின்றன. ஒவ்வொரு சக்தி மட்டமும் குறித்த ஒரு எண்ணிக்கைக்கு மேல் இலத்திரன்களைக் கொண்டிருப்பதில்லை. இதன் ………… இலத்திரன்கள் ………… சக்தி மட்டங்களில் பரம்பியுள்ளன

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஓர் நற்செய்தி
தேங்காய், எள்ளு, இலுப்பைப்பருப்பு
எண்ணெய்வகைகளை நவீன இயந்திரத்தில்
உடனுக்குடன் எண்ணெய்
வடித்துக் கொடுக்கப்படும்
நீங்கள் உடன் நாடவேண்டிய இடம்.
"பாலன் மில்ஸ்"
மாவடிச் சந்தி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

# சஞ்சீவி

01.03.1986

ஓர் நற்செய்தி
தேங்காய், எள்ளு, இலுப்பைப்பருப்பு,
எண்ணெய் வகைகளை நவீன இயந்திரத்தில்
உடனுக்குடன் எண்ணெய்
வடித்துக் கொடுக்கப்படும்.
நீங்கள் உடன் நாடவேண்டிய இடம்
"பாலன் மில்ஸ்"
மாவடிச் சந்தி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

## ராஜீவ் - ஜே. ஆர். சடுகுடு பேச்சு:

# முடிவு விரைவில் தெரிந்து விடும்

### வளைந்து நிமிரும் நிலை மாறுமா?

30 ஆண்டுகால இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் கட்டம் வந்து விட்டது.

44 வயது பிரதமரும் 78 வயது ஜனாதிபதியும் நடத்திய, நடத்தும் 'சடுகுடு'ப் பேச்சுக்களின் வெற்றி தோல்வி விரைவில் தெரியப் போகிறது.

1944 இல் பிரதமர் ராஜீவ் காந்தி, 2 வயதுக் குழந்தை.

இலங்கை எங்கே இருக்கிறது? அந்த நாட்டில் யார் வசிக்கின்றார்கள்? இவை பற்றி தெரியாத பாலகன் ராஜீவ் காந்தி.

அந்த 1944 இல் இலங்கை சட்ட சபையில் இலங்கையின் உத்தியோக மொழி சிங்களம் மட்டுமே என்று பிரேரணை கொண்டு வந்தவர் திரு. ஜெயவர்த்தன.

அன்று திரு. ஜெயவர்த்தனவுக்கு 38 வயது

இன்று 78 வயதிலும் விடாப்பிடியாக நிற்கின்றார் திரு. ஜெயவர்த்தன, ஜனாதிபதியாக.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

வளைத்துத் தான் பார்க்கிறார் பிரதமர் காந்தி

வளைவது போல் காட்டி மீண்டும் நிமிர்ந்து விடுகிறார் திரு. ஜெயவர்த்தன.

வளைந்து போகக் கூடியவர் என்றுதான் ஜெய

**உள்ளும் புறமும்**
**குறுமுனி**

வர்த்தனவைப்பற்றி திரு. பண்டாரியும் நினைத்துக் கொண்டார்.

சுற்றியுள்ளவர்கள் தான் ஜெயவர்த்தனவை நிமிர்த்தி விடுகின்றனர் என்பது இந்தியாவுக்குப் புரிந்து விட்டது.

பிரதமர் காந்தி பதவிக்கு வந்த பின்னர் டில்லி, டாக்கா சென்று திரு. ஜெயவர்த்தன குழைந்து பேசினார். இன்னது செய்வேன் என்று வாக்குறுதியும் கொடுத்தார்.

57 பக்கப் பதிலில் அந்த வாக்குறுதிகள் அடங்கியிருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அன்னையும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறு தானே!— இப்படி எண்ணி 'சிம்பிளாக' நடந்து கொண்ட ஜெயவர்த்தனவுக்கு மாலைதீவில் இருந்து வந்த கர்ஜனை மயக்கத்தைக் கொடுத்தது.

உண்மையில் மாலைதீவில் இருந்து வந்தது கர்ஜனைதானா? என்று எம்மில் சிலர் கூட நினைத்தது உண்டு.

ஆங்கிலத்தில் திரு. ராஜீவ் காந்தி பின்வருமாறு சொன்னார்

NEW DELHI, Sunday (AFP) - Prime Minister Rajiv Gandhi today said Sri Lanka should tell India if it was not interested in an Indian initiative to help resolve the Island's ethnic problem, the Press Trust of India (PTI) said.

Mr. Gandhi told reporters in the Maldives capital of Male shortly before ending a three-day official visit there that Sri Lanka "should let us know" if it was no longer interested in the initiative, PTI said.

இப்படி டெய்லிநியூஸ் பெப்ரவரி 11 ஆம் திகதி இதழில் பிரசுரமானது.

இதைத்தான் 'உதயன்' பெப்ரவரி 10 நாளிதழ் "எமது முயற்சியில் அக்கறை இல்லையா? இலங்கை அரசே, நேரடியாகச் சொல்லு!" என்ற தலைப்பில் செய்தியாக வெளியிட்டது.

மாலைதீவுக் கர்ஜனை, அன்னையின் சாயலாக உள்ளதே என்று இலங்கை அரசு வட்டாரங்கள் அதிர்ந்தன.

'தாயைப் போலப் பிள்ளை, நூலைப் போலச் சேலை' – என்பது அனுபவ மொழி அல்லவா!

அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பார்களே!

அது போன்று, மாலைதீவுக்குப் பின்னர் இந்திய நாடாளுமன்றத்தில் வெளிநாட்டமைச்சர் பகத் கடந்த புதனும் வியாழனும் காரசாரமாகப் பேசினார்.

1985 இல் கிழக்கு இலங்கையில் தமிழ்-முஸ்லிம்களுக்கு இடையே நடந்த வன்செயல்களின் பின்னால் 'மறைந்த கரம்' ஒன்று இருப்பதாக வெளிநாட்டு இணை அமைச்சராக இருந்த குர்ஷித் ஆலம் கான் பேசினார்.

அப்பேச்சுக்கே சன்னதம் கொண்டு திம்புவில் நடந்த 'சார்க்' பூர்வாங்க மாநாட்டுக்கு வரமாட்டேன் என்று அடம்பிடித்தது இலங்கை அரசு.

இன்று வெளிநாட்டு அமைச்சர் பகத் பேசிய பேச்சோ பல படி மேலே சென்று விட்டது.

இணை அமைச்சர் குர்ஷித் ஆலம் கான் பேச்சுக்கு சுடச்சுடச் பதில் கொடுத்தார் பதில் வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்னாண்டோ.

இன்று முழு அமைச்சர் பேசிய பேச்சுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரைக் கொண்டு பதில் கொடுக்கப்பட்டது.

அரசோ பெட்டிப்பாம்பாகி விட்டது.

இந்த நிலையில், இலங்கை அரசு புதிய யோசனைகளைச் சமர்ப்பித்து இருப்பதாக பிரதமர் காந்தி அறிவித்துள்ளார்.

மீண்டும் வளைகின்றார். இப்படி வளைந்து நிமிர்வதற்குத்தான் காலக்கெடு கொடுத்தாகி விட்டதே!

பொறுத்து இருந்து பார்ப்போம்.

## வாழு! வாழவிடு

வாழு; வாழவிடு!!

இனப் பிரச்சினையைத் தீர்க்க தந்தை செல்வா ஆட்சியாளருக்கு இடித்து இடித்துச் சொன்ன தாரக மந்திரம் இது.

சமஷ்டி அரசமைப்பு முறையின் உட்பொருளே 'வாழு– வாழவிடு' தான்.

இந்தத் தத்துவத்தை முன் வைத்து 1949 இல் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தவர் தந்தை செல்வா.

1957 இல், திருமலை யாத்திரை கூட இனி வேண்டும் சமஷ்டி ஆட்சி—என்ற கோஷத்துடன்தான் நடத்தப்பட்டது.

ஒக்ஸ்போர்டில் பட்டம் பெற்றவர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா.

1926 இல் நாடு திரும்பியவும் "இலங்கைக்கு சமஷ்டி அரசமைப்பு முறைதான் சிறந்தது"— என்று அவர் சொன்னார்.

அந்த உள்ளத்துடன் இருந்த படியால்தான் 1957 இல் பண்டா— செல்வா ஒப்பந்தமே உருவாக முடிந்தது.

இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிதான் சிறந்தது என்று ராஜாஜிதான் முதலில் இந்தியாவில் இருந்து சொன்னார்.

பின்னர் பல வெளி உலகப் பிரமுகர்கள் சொன்னார்கள்.

சிங்கள அரசியல் தலைவர்கள் இவற்றிற்கு செவி சாய்க்கவே இல்லை

இறுதியில் தந்தைசெல்வாவே சமஷ்டி ஆட்சிக் கொள்கையைக் கைவிட்டார்.

தமிழனுக்குத் தேவை பூரணசுதந்திரமே என்று உரிமைக் குரல் எழுப்பினார், தந்தை செல்வா.

அந்த உரிமைக்குரலே தமிழரின் அபிலாஷையாக இன்று அமைந்து விட்டது.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதியாக வரும் வாய்ப்பைப் பெற்றுள்ள திரு. எட்வர்ட் கென்னடி திரு. ஜெயவர்த்தனவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

"இந்திய அல்லது அமெரிக்க சமஷ்டி அரசமைப்பு முறையைக் கையாண்டு இனப்பிரச்சினையைத் தீருங்கள்" இப்படி திரு. கென்னடி தனது கடிதத்தில் சிபார்சு செய்துள்ளார்

பண்டா—செல்வா ஒப்பந்தத்தை இன்றும் எதிர்ப்பதாகக் கூறும் ஜெயவர்த்தனவா கென்னடியின் யோசனையை ஏற்கப்போகிறார்?

## இப்படி ஒரு கவிதை!

சிந்தையைத் தூண்டும் ஒரு ஆங்கிலக் கவிதை இது. இயற்றியவர் 'யாரோ'!

We are fighting for a seperate state (boys)
We are fighting for a unitary state (soldiers)
Both are fighting for a state
While statesmen are making statements

தனிநாட்டுக்காக நாம் போராடுகின்றோம் (போராளிகள்)
ஒரு நாட்டுக்காக நாம் போராடுகின்றோம் (சிப்பாய்கள்)
இருவரும் நாட்டுக்காகவே போராடுகின்றோம் – ஆனால்
நாட்டுத் தலைவர்கள் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இதுதான் ஆங்கிலப் பாடலின் தமிழாக்கம். ஆங்கிலப் பாடலில் உள்ள நயத்தையும் சுவையையும் அப்படியே அச்சொட்டாகத் தமிழில், தருவது சிறிது கடினம் தான்!

### கொலையுண்ட தமிழர் எண் ஒரு புள்ளி விவரம்

பெப்ரவரி மாதத்தில் 171 தமிழர் துப்பாக்கிச் சூடு, குண்டு வீச்சுக்குப் பலியாகினர்.

இம் மாதத்தில் தான் யாழ்குடாநாட்டில் முதல் முதலாக யுத்த விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றன.

தங்கவேலாயுதபுரம் பகுதியில் இடம் பெற்ற கோரச்சம்பவம்தான் இம் மாதத்தில் உச்சக் கட்டமாக அமைந்தது.

2 குழந்தைகள், பெண் விவசாயிகள் அகியோரும் இறந்தவர்களில் அடங்குகின்றனர்.

ஜனவரி மாதத்தில் 141 தமிழர் துப்பாக்கிச் சூடுபட்டு மரணமானார்கள் என்பது தெரிந்ததே!

சம்பவம் நடைபெற்ற இடம், திகதி எண்ணிக்கை வருமாறு;

பெப் 1:
தெற்கிலுப்பைக்குளம்01
தர்மபுரம்-60

பெப் 3:
தம்பலகமம்-02.

பெப் 5:
ஏறுவூர்-03
பருத்தித்துறை-08

பெப் 7:
ஊர்காவற்றுறை-01

பெப் 11:
வவுனியா-03,
தம்பலகமம்-04

பெப் 13:
பூவரசங்குளம்-04

பெப் 14:
மீராவோடை-03,
கரடியனாறு-03,
புன்னை-02

பெப் 15:
யாழ்ப்பாணம்-03

பெப் 17:
மட்டக்களப்பு-01

பெப் 19:
தாவடி-03,
தங்கவேலாயுதபுரம்-60

பெப் 21:
ஊறணி-01

பெப் 22:
மன்னார்-03

பெப் 25
மன்னார்-02:
தலவாக்கலை-01

பெப் 27
தாவடி-02,
சுருவில்-01

## தேர்தல் முடிவுகள்

# எம்.ஜி. ஆருக்கு சவால்

### கருணாநிதியின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

தமிழ் நாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றத் தேர்தல்களில் திராவிட முன்னேற்றக்



கழகம் கணிசமான அளவு வெற்றி ஈட்டி உள்ளது.

இந்த வெற்றி, தமிழக அரசியலில் நீண்டகாலமாக முடிசூடா மன்னனாக இருந்து வந்த எம். ஜி. இராமச்சந்திரனுக்கு ஒரு பெரும் சவால் ஆகும்.

தமிழக அரசியலில் தி. மு. க. வின் செல்வாக்கு மீண்டும் தலை தூக்கும் அறிகுறிகள் ஏற்பட்டிருப்பதாக இத் தேர்தல் முடிவுகள் குறித்து அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

97 நகராட்சி மன்றத் தலைவர் பதவிகளுக்கு நடந்த தேர்தலில் தி. மு. க. கூட்டணி 64 இடங்களைக் கைப்பற்றி இருக்கிறது.

அதே போன்று 628 பேரூராட்சி மன்றத் தலைவர் பதவிகளுக்கான தேர்தலிலும், 382 ஊராட்சித் தலைவர் பதவிகளுக்கான தேர்தலிலும் தி. மு. க. தனித்து, அ. தி. மு. க. வை விட கூடுதல் இடங்களைக் கைப்பற்றி உள்ளது.

தி. மு. க. நகராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்றது பெரிய சாதனை என்பதல்ல– தி. மு. க. வின் செல்வாக்கு அடிமட்டத்தில் இருந்த காலங்களில்கூட தி. மு. க. நகரப் பகுதிகளில் கணிசமான அளவு வெற்றிகளை ஈட்டி வந்தது.

அ. தி. மு. க. வின் கோட்டையாக விளங்கி வந்தவை கிராமப் பகுதிகள்தான்.

15 வருடங்களின் பின்னர் சடந்தவாரம் நடந்த தேர்தல் முடிவுகள், இக் கோட்டை ஆட்டம் காணுவதையே புலப்படுத்துகின்றன.

1972 ஆம் ஆண்டு தி. மு. க. வில் இருந்து பிரிந்து அ. தி. மு. க. புதுக்கட்சி ஆரம்பித்த நாள் முதல் எம். ஜி. ஆரின் அண்ணா தி. மு. க, சகல தேர்தல்களிலும் சக்கைப்போடு போட்டு வந்தது.

கடைசியாக 1984ஆம் ஆண்டு நடந்த லோக சபை, சட்டசபைத் தேர்தல்களில் எம். ஜி. ஆர். இல்லாமலேயே அண்ணா தி. மு க. அமோக வெற்றியீட்டி இருந்தது.

அதுவும் தகவல் துறை அமைச்சர் வீரப்பனுக்கும், கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் ஜெயலலிதாவுக்கும் இடையில் கருத்து மோதல்கள் உச்சக் கட்டத்தில் இருந்த சமயம் இந்த வெற்றி கிடைத்தது.

ஆனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அண்ணா தி. மு. க வின் செல்வாக்கு அதாவது கவர்ச்சி குறைந்த



துக்கு மூன்று காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

ஒன்று எம். ஜி. ஆர் உடல் நலன் குன்றி இருப்பது.

மற்றது எம். ஜி. ஆர் முன்னரைப் போன்று தேர்தல் பிரசார வேலைகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டு வர முடியாமல் போனது.

மூன்றாவது இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அ. தி. மு. கவின் நிலைப்பாடு போதாது என்ற கருத்து தமிழகத்தில் ஓங்கி வருவது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில், எம். ஜி. ஆரைவிட தீவிரவாதியாக கருதப்படும் கருணாநிதிக்கு இத்தேர்தல் முடிவுகள் புதிய உத்வேகத்தைக் கொடுக்கும் என்று தமிழகத்தில் அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். அது கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

## உலக உலா
**என்.பி.சீலன்**

# தமிழருக்கு எதிராக அரசின் அடக்குமுறை

## அதிகரித்து வருவதாக "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை கூறுகிறது

தங்கவேலாயுதபுரம் படுகொலை பற்றி இந்தியாவில் இருந்து வெளிவரும் 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' ஆங்கில நாளிதழ் ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது.

தலையங்கம் வருமாறு;

இலங்கையில் படுகொலைகள் தினசரி நடைபெறும் விஷயமாகி விட்டது.

உடும்பன் குளத்தில் 60 விவசாயத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டது இந்த விஷயத்தில் இன்னொரு பரிமாணத்தை ஏற்படுத்தி விட்டது

அரசு அவர்களைப் போராளிகள் என்று கூறி சடலங்களை எரித்தும் விட்டது.

சம்பவம் நடந்த அந்த இடத்தைச் சென்று பார்வையிட்டது மட்டக்களப்புப் பிரஜைகள் குழு.

இப்படி ஒரு பயங்கரக் காட்சியை வாழ்நாளிலேயே காணவில்லை என்று குழுவைச் சேர்ந்த வண பிதா சந்திரா பெர்னாண்டோ கூறியிருக்கிறார்.

கருகிய சடலங்கள் சம்பவ இடத்தில் காணப்பட்டன.

அதனால் கொலை நடந்தது பற்றியதில் எதுவித கருத்து வேற்றுமைக்கு இடமே இல்லை.

இப்பொழுதுள்ள கேள்வி என்ன என்றால் கொல்லப்பட்டு எரிக்கப் பட்டவர்கள் போராளிகளா? அல்லது அப்பாவி விவசாயத் தமிழ் மக்களா? என்பதே.

அவர்களைப் போராளிகள் என்று வைத்துக் கொண்டாலும் இப்படியான ஒரு படுகொலையை ஒரு நாகரிக அரசாங்கம் அங்கீகரிக்க முடியுமா?

போராளிகள் தான் என்றால் அவர்களைக் கைது செய்து நீதிமன்றம் முன்னால் நிறுத்தி இருக்க வேண்டும்.

அதை விடுத்து சுட்டுக் கொன்று எரித்த செயலுக்கு எந்தக் காரணத்தையும் கூறித் தப்ப முடியாது.

ஐயா, தமிழருக்கு எதிராக அரசின் அடக்குமுறை அதிகரித்து வருகிறது.

போராளிகளைக் கட்டுப்படுத்த முடியாத விரக்தி நிலையில் ஆயுதப்படையினர் சினம் கொண்டு குடிமக்களைத் தாக்குகின்றனர்.

இலங்கை அரசின் 'கண்டும் காணாதது' போன்ற கொள்கையினால் குடிமக்களைத் தாக்குவது அதிகரித்து வருகிறது.

இதற்கு இலங்கை அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இல்லையேல் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நடைமுறையில் தமிழர் எப்படி நம்பிக்கை வைக்க முடியும்?

இலங்கை நாடாளுமன்றக் கூட்டத்தொடரை திரு ஜெயவர்த்தன தொடக்கி வைத்துப் பேசுகையில் ஒன்று சொன்னார்.

அகிம்சையில் இலங்கை அரசு நம்பிக்கை வைத்துள்ளதாக ஜெயவர்த்தன சொன்னார்.

இப்படி அவர் சொன்ன மறுநாளே உடும்பன் குளக் கொலைகளும் யாழ்ப்பாணத்தில் விமானத் தாக்குதல்களும் இடம் பெற்றன.

பெண்கள், குழந்தைகள் உட்படப் பலர் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டனர்.

திரு ஜெயவர்த்தனவோ இச்சம்பவங்கள் பற்றி கவலைகூடத் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்படும் என்பதில் சிறு துளி நம்பிக்கை தான் உண்டு.

இப்படி ஹிந்துஸ்தான் டைம்ஸின் ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### தமிழ் மொழி . . .
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யோசனைகளையும் தயாரித்துக் கொடுக்கலாம்.

தமிழர் தாயகம் பிரிபடாத முறையில் தமிழ் மொழி மாநில சுயாட்சி இல்லாத எந்தத் திட்டத்தையும் கூட்டணி ஏற்காது.

இந்த நிலையில் இருந்து கூட்டணி எக்கட்டத்திலும் பின்வாங்காது.

என்ன கஷ்டங்கள் வந்தாலும் தமிழ் மொழி மாநில சுயாட்சிக் கோரிக்கையைக் கூட்டணி கைவிடாது.

இப்படி சென்னையில் உள்ள கூட்டணி வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

### கருத்துக் கல . . .
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நலியச் செய்யும் சதியே.

விவசாய அபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி, கடல்வள அபிவிருத்தி எல்லாம் தமிழ்ப் பகுதிகளுக்குப் பொருந்தாதவை என்று நினைக்கிறதோ இந்த "அபிவிருத்தி அரசு"?

ஆளுக்கொரு நீதியா? அது அகற்றப்படுவது எப்போது?

### உருத்திரபுரத் . . .
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகிறது.

நேற்றைய தேடுதல் தொடர்பாக மேலதிக விவரம் ஏதும் செய்தி அச்சுக்குப் போகும் வரை தெரியவில்லை.

இதேவேளை ராணுவத்தினர் நேற்று முன்தினம் கனகாம்பிகைக்குளம் பகுதியைச் சுற்றிவளைத்து சோதனையிட்டனர்.

சோதனையின் போது குடியிருப்போர் இல்லாத மூன்று வீடுகள் உடைக்கப்பட்டன. மற்றொரு வீடு தீயிட்டுச் கொளுத்தப்பட்டது. கொளுத்தப்பட்ட வீட்டில் இருந்து சைக்கிள் ஒன்றும் றேடியோ ஒன்றும் ராணுவத்திற்கு கைமாறியது.

இதேவேளை பல இளைஞர்களைக் கைது செய்து முகாமிற்குக் கொண்டு வந்தனராயினும் இருவர் தவிர ஏனையோர் விடுதலை செய்யப்பட்டனர்.

## 35 இளைஞர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 1 கடந்த வியாழன் இரவு மருதானையில் உள்ள விடுதி ஒன்றில் தங்கி இருந்த 35 வடபகுதித் தமிழ் வாலிபர்கள் கைது செய்யப்பட்டனர்.

புதன்கிழமை இரவு ஆசிரியர் பரீட்சை எடுக்க வந்த வடபகுதி தமிழ்ப் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

## 64 பேர் பலி

புதுடில்லி, பெப் 28 கேரளத்தில் தெல்லிச்சேரி என்னும் பட்டணத்தில் இன்று அதிகாலை நிகழ்ந்த கோர ரயில் விபத்து ஒன்றில் 64 பேர் கொல்லப்பட்டனர். சுமார் நூறு பேர் படுகாயமடைந்தனர்.

இந்துக் கோயில் ஒன்றில் வாண வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பக்தர்களே இந்த விபத்தில் சிக்கினார்கள்.

## நாணய மாற்று விவரம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகின்றது.

(இது நேற்றைய மாற்று விகிதமாகும்)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 39. 81 |
| அமெ. டாலர் | 27. 35 |
| இந்திய ரூபா | 02. 24 |
| மார்க் (ஜெர்மனி) | 11. 92 |
| அவுஸ். டாலர் | 19. 09 |
| கனடா டாலர் | 19. 34 |
| பிராங் (பிரெஞ்சு) | 03. 88 |

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷ்ரூ உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 01-03-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org